வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper
# உதயன்
சஞ்சீவி
விலை ரூ. 60
சுடர் : 38
கதிர் : 71
05 ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 2023
தை 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054
பக்கங்கள் 16+8

## கரிநாளில்
# அடக்குமுறைகளை எதிர்த்து கிளர்ந்தது தாயகம்

- கிழக்கை நோக்கிய பேரணி யாழிலிருந்து நேற்று ஆரம்பம்
- ஹர்த்தாலால் சில இடங்கள் முடங்கின

யாழ்ப்பாணம், பெப்ரவரி 5

சிங்கள தேசத்தின் அடக்குமுறைக்கு எதிராக தமிழர் தாயகத்தில் பரவலாக கரிநாள் போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன், வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய மாபெரும் எதிர்ப்புப் பேரணி பல்லாயிரக் கணக்கானோரின் பங்குபற்றலுடன் பேரெழுச்சியாகப் புறப்பட்டது. 15



## சுதந்திரநாள் நிகழ்வுகள் கொழும்பில் சோபையிழப்பு

- முன்னாள் ஜனாதிபதிகள் வரவில்லை
- கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்
- தமிழிலும் இசைக்கப்பட்ட தேசிய கீதம்

கொழும்பு, பெப். 5

இலங்கையின் சுதந்திரநாள் நிகழ்வுகள் தலைநகர் கொழும்பில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று இடம்பெற்றன. போராட்ட அச்சங்களுக்கு மத்தியில் 15



## யாழில் சிங்கக் கொடியுடன் காவாலிகள் குறளிவித்தை

### கண்மூடி கைகட்டி வேடிக்கை பார்த்த பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கையின் தேசியக் கொடியான வாளேந்திய சிங்கத்தை தமது மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி என்ப 14

## 'வடக்கிலிருந்து கிழக்குக்கு' பேரணியில் தமிழரசு எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் கரிநாள் போராட்டம் இடம்பெற்றபோதும் அதில் பங்கேற்காமல், யாழ்ப்பாணத்தில் 14

## பல்கலையில் 'கறுப்புக் கொடி'

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கையின் 75 ஆவது சுதந்திரநாளை கரிநாளாக தமிழர் தேசம் நேற்றுக் கடைப்பிடித்தது. தமிழர் தேசத்தின் கல்வியியல் அடையாளமாக விளங்கும் யாழ்ப்பா 14

## ஒற்றையாட்சிக்குள்ளேயே தமிழர்களுக்குத் தீர்வு!!!

- சுதந்திர நாள் உரையில் ரணில் திட்டவட்டம்
- '13' பற்றி 'கப்சிப்'
- பொய் சொல்லும் அரசியல்வாதிகளையே நாட்டு மக்கள் ஆதரிக்கின்றனராம்
- தனிப்பட்ட ஆதாயத்துக்கு வாக்களித்தமையே வங்குரோத்து நிலைமைக்கு காரணமாம்



கொழும்பு, பெப்ரவரி 5

இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்டு அதிகாரங்கள் பகிரப்படும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி 14



## தமிழரசுக் கட்சியின் தொப்பிப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை 'இருள் சூழ்ந்த சுதந்திரம்' எனப் பிரகடனப்படுத்தி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இதன்போது அஹிம்சைப் போராட்டத் 14

## பேரணி 2 ஆம் நாள்: முள்ளிவாய்க்காலில் உறுதியுரை இன்று

யாழ்ப்பாணம், பெப். 5

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆரம்பமான பேரணியின் இரண்டாம் நாள் கிளிநொச்சி பரந்தனிலிருந்து 14

## சுதந்திரதின நிகழ்வின் போது சுருண்டு விழுந்த மாணவர்கள்

### கண்டுகொள்ளாத இராஜாங்க அமைச்சர்

வவுனியா, பெப். 5

வவுனியாவில் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர நாள் கொண்டாட்டத்தின்போது 28 மாண 14

வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோருக்கும் மற்றும் இலங்கையில் பணம் பெறுபவருக்கும் பரிசுகள் பல...
செலான்
Season 2
ஒரு கோடிக்கு மேற்பட்ட பரிசுகள்
மாபெரும் சீட்டிழுப்பில் பத்து இலட்சம்
Western Union கொடுக்கல் வாங்கல்களுக்கு நிச்சய பரிசு
இலட்சாதிபதிகள் 38 பேர்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
011 200 88 88 www.seylan.lk
செலான் வங்கி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு நீதிகோரும் பேரணி கிழக்கு நோக்கி நேற்றுப் பேரெழுச்சி



யாழ்ப்பாணம், பெப். 5

தமிழர்களுக்கு நீதிகோரியும், தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி, பலநூறு மக்களின் பங்கெடுப்புடன் நேற்று எழுச்சியாக இடம் பெற்றது.

'சிறிலங்காவின் சுதந்திரதினம் தமிழர்களுக்குக் கரிநாள்' என்று அறிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாலும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாலும் ஹர்த்தாலுக்கும் பேரணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு வரை 4 நாள்கள் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், பேரணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்றுக்காலை ஆரம்பித்தது. மாணவர்களுடன் பொதுமக்களும் இணைந்து பேரணியை வலுப்படுத்தினார்கள். பெருமளவான வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டி ஹர்த்தாலுக்கு முழு மையான ஆதரவை வழங்கினார்கள். பல வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

சுயநிர்ணய உரிமை தமிழர்களுக்கு வேண்டும், மரபுவழித் தாயகமே தமிழர்களின் தேசம், இராணுவமே வெளியேறு, எமது காணிகள் எமக்கு வேண்டும், அரசியல்கைதிகளை விடுதலை செய் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், பதாகைகளை ஏந்தியவாறும் எழுச்சிபெற்ற இந்தப் பேரணி நேற்றுமாலை இரணைமடுவைச் சென்றடைந்து அங்கு நிறைவுபெற்றது. (ம-66)



## மன்னாரிலும் நேற்று எதிர்ப்புப் போராட்டம்

மன்னார், பெப். 5

இலங்கையின் சுதந்திரதினத்தைக் கரிநாளாக அறிவித்து, மன்னாரில் நேற்று எதிர்ப்புப் போராட்டம் மாவட்டச் செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இளைஞர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் உணர்வாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு கைகளை சங்கிலியால் கட்டி வாயை கறுப்புத் துணியால் கட்டி, பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-213)

## அரச நிறுவனங்களில் சுதந்திரதின நிகழ்வு!



இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகள் நேற்று அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்பட்டன. இலங்கையின் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களில் மாவட்டச் செயலர்களின் தலைமையில் சுதந்திரதின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், சர்வமதத் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸ் அதிகாரிகள், அரச அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ- 110,113,9,60,213)

## பேரணியில் ஈடுபட்டோருக்கு உணவு, தண்ணீர் தாராளம்

### வர்த்தகர்கள் நெகிழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலந்துகொண்டோருக்கு உணவுகளும், குடிதண்ணீரும் வர்த்தகர்களால் வழங்கப்பட்டன.

பேரணிகள் வர்த்தக நிலையங்களைக் கடக்கும்போது தத்தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வைத்து உணவுகள், சிற்றுண்டிகள், குடிதண்ணீர் போத்தல்கள் மற்றும் பிஸ்கட் வகைகள் என்பவற்றை வர்த்தகர்கள் வழங்கினார்கள். சில வீடுகளுக்கு முன்னாலும் பேரணியில் ஈடுபடுவோரின் தாகம் தீர்ப்பதற்காக குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ம)

## சுதந்திர தினத்தையொட்டி 1,000 ரூபா நாணயக்குற்றி




கொழும்பு, பெப். 5

இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஆயிரம் ரூபா நாணயக் குற்றி இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் மத்திய வங்கியின் ஆளுநரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த நாணயக் குற்றி கையளிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படும் 71ஆவது ஞாபகார்த்த நாணயக்குற்றி இதுவாகும்.

இந்த நாணயக்குற்றி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. நாணயத்தில் 'சுதந்திரதினக் கொண்டாட்டம்' என்ற சொல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (ச-இ)



## சுதந்திரதினத்தை முன்னிட்டு யாழில் பொலிஸார் குவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

சிறிலங்காவின் சுதந்திரதினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் நகரப் பகுதியின் பாதுகாப்பு நேற்றுப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

சுதந்திரதினத்தை கறுப்புநாளாக அறிவித்து பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வீதிக்குவீதி பலநூறு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும், கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம)



### வவுனியா, யாழ்ப்பாணத்தில்

## சுதந்திரதினத்தை முன்னிட்டு 13 கைதிகளுக்கு விடுதலை

வவுனியா, பெப். 5

நாட்டின் 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் பல சிறைக்கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர். இதன் ஒரு பகுதியாக வவுனியா சிறையிலிருந்து ஐந்து கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் செலுத்த வேண்டிய அபராதங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், சிறு குற்றங்களுக்காக கைதாகி தண்டனையில் பாதியை நிறைவுசெய்த கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர். இதேவேளை யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து எட்டுக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 7 ஆண்கள், ஒரு பெண் என 8 கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர். (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கிலிருந்து கிழக்குக்கு நகரும் மக்கள் பேரெழுச்சி
















## ஹர்த்தாலால் முடங்கிய தாயகம்







## அடிமை விலங்குடைக்க ஒன்றாய் எழுவோம்

தமிழர்களுக்கு நீதிகோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாலும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாலும் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட பேரணி பேரெழுச்சி பெற்றது. சிவில் சமூக அமைப்புக்கள், குழந்தைகள், பெரியவர்கள், கல்வியியலாளர்கள், மதகுருக்கள் என்று பலநூறு பேர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். (ம)



இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கத்தோலிக்க குருமார்கள் மருதானையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகுலேஸ்வரர் ஆலயம் இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், பெப்.5

கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் மறுநாள் 17ஆம் திகதி பெரிய சப்பறத் திருவிழாவும் 18ஆம் திகதி இரதோற்சவமும் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் மாலை நான்கு ஜாம பூசைகளுடன் மகா சிவராத்திரி உற்சவம் ஆரம்பமாகி மறுநாள் 19ஆம் திகதி கண்டகி தீர்த்தத்தில் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ச)


## நினைவு கூறுகிறோம் ...

## அமரர் சின்னத்துரை கனகம்மா

(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)

### 10ஆவது சிரார்த்த தினம்



பிறப்பு
01.11.1922

இறப்பு
05.02.2013

**நினைவலைகள்**

மம்மி!
எம்மால் மறக்கமுடியாத பெரும்தாயே
உம் சிறகுகளின் கூட்டிலே
சீராய் வளர்ந்தோம்
அன்பென்னும் கயிற்றினால்
அழகாய் பிணைத்தீர்
கலங்கி நின்ற போதிலெல்லாம் - எம்
கண்ணீர் துடைத்தீர்
பதறாமல் சிதறாமல்
பக்குவமாய் வளர்த்தீர்
பத்தாண்டுகள் ஆயிற்று
பரிதீசில் நீர் இன்று
சொத்தாக நீர் தந்த
முத்தான வார்த்தைகள்
நித்தம் நித்தம்
நெஞ்சிலே ரீங்காரமிடும்
மனம் நிறைந்துள்ள மம்மி
மறக்க முடியாத தாயே
இறைவழி காட்டி நின்றீர் - இன்றும்
குறைவின்றி வாழ்கின்றோம்.

(CS 23272)(3/6)

உங்கள் நினைவுகளுடன்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## பத்தாவது ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
06.09.1990

ஆண்டவன் பாதத்தில்
26.01.2013

## அமரர் செல்வி தனராஜா துளசிகா [துளசி]

(கலைப்பீட 2ஆம் வருட மாணவி யாழ். பல்கலைக்கழகம் - 2013)

திதி : பூரணை (05.02.2023)

கண்முன்னே வாழ்ந்த காலம் பத்தாண்டு
- போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்த நாளும்
- உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கி
- சென்றாலும்
கண்விட்டு மறையாமல் கனகாலம்
- இருப்பீர்கள் எம்மோடு
எங்கள் பாசத்தின் உறைவிடமே
நெஞ்சோடு கலந்த உறவே - பாசப்பறவையே
பண்போடு வாழ்ந்த தெய்வமே பண்பின் சிகரமாய்

பாசத்தின் திருவுருவமாய்
புன்னகை தவழும் அன்பு முகமாய்
கனிவான குரலொலியாய் அறிவின்
- சிகரமாய்
உன் அன்பு நினைவுகள் அனைவரது
- உள்ளத்திலும் அலை மோதுகிறது.
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களாய் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
- கண்ணீர்த் துளிகளை
காணிக்கை ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
(தாய், தந்தை, சகோதரர்கள், மைத்துனிமார்)
45/A3, ஞானவைரவர் லேன், பலாலி வீதி, கோண்டாவில்

(CS 48841)(3/6)



# மரண அறிவித்தல்



தோற்றம்
15.10.1962

மறைவு
03.02.2023

## சொக்கநாதன் தயாபரன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோபால் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் நோர்வே ஒஸ்லோவை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கநாதன் தயாபரன் நேற்றுமுன்தினம் (03.02.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர்களான சொக்கநாதன் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், பத்மநாதன் - செல்வராணி தம்பதிகளின் மருமகனும், பத்மராணி (பத்மா) வின் அன்புக்கணவரும், அபூர்வன், வையகன், நர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும், Ann Cindy, Brage ஆகியோரின் மாமனாரும், முகுந்தன், சபேசன், மால்மருகன், சதானந்தி, சடாச்சரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்சன், அனுஷன், லேகா, சுலோசனா, பிரபாலினி, தவநிதி, சிவகுமரேஸ், அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யுவநெலின்சாந்தி, அனுசுயா, ராஜ்குமார் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2023) திங்கட்கிழமை நோர்வே நேரப்படி Alfaset gravlund இல் 10.00 மணி முதல் 12 மணி வரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

சகோதரர்கள்
முகுந்தன் : 021 222 8824, சபேசன் : 076 992 9890
மால்மருகன் : 077 044 3313
செல்வராணி (மாமி) : 077 724 4055

(CS 22746 ) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் முதன்முறையாக

# நவீன தொழில்நுட்பத்தில் உருளைக்கிழங்கு செய்கை

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை இம்முறை பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விவசாய அமைச்சின் 'விவசாயத்தை நவீனமயமாக்கல்' திட்டத்தின் கீழ் இந்த உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுகிறது. இந்தமுறை காலபோகத்துக்கு யாழ்ப்பாணத்தில் 96 ஏக்கர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்டுள்ளது.

கோப்பாய், உடுவில் உள்ளிட்ட விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலேயே அதிகளவில் விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நவீன தொழில்நுட்பத்தினூடாக உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் உயர் பாத்தி அமைத்தல், பொலித்தீன் ஊடாக சொட்டு நீர்ப்பாசனம், இலேசான உரம் பயிருக்கு சென்றடைதல் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளன. (ச-17)

# ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமம் திறப்பு விழா

தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் போர்க்காலத்தில் அழிவுற்ற 'ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமம்' மீண்டும் புதுப்பொலிவுடன் நிர்மாணம் செய்யப்பட்டு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் கொழும்பு சர்வதேச கிருஷ்ண பக்திக்கழக தலைவர் ஸ்ரீமான் மகாகர்த்தா தாஸ் சுவாமிகள், சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராசா, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சுகிர்தன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை தேவை.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். பணவரவு மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படம். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை நிறைவேறும்.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

# பரிசளிப்பு விழா

கொடிகாமம் பெப் 5

மந்துவில் சிறீபாரதி வித்தியாலயத்தின் 93ஆவது ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இராஜதுரை அபிராமி, சிறப்பு விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி செ.சிவராஜசிங்கம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஓய்வுநிலை ஆசிரியர் க.தவயோகராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-159)

# இடியுடன் மழைக்கு வடக்கில் சாத்தியம்

கொழும்பு, பெப். 5

காற்றழுத்தத் தாழ்வுநிலை நாட்டைவிட்டு விலகிச் சென்றுள்ளது. எனினும், வடக்கில் மழைக்கோ அல்லது இடியுடனான மழைக்கோ சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

காற்றழுத்தத் தாழ்வுநிலையால் ஏற்பட்டிருந்த தாக்கம் இனி மெல்லமெல்ல நீங்கும். எனினும், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம)

# மரக்கறிப் பயிர்களில் பங்கசு நோய்ப்பரவல்

## விவசாயிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்களில் பங்கசு நோய் ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இதுகுறித்து விவசாயிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த சில நாள்களில் பெய்த மழையால் வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட சகல மரக்கறிப் பயிர்களிலும் பங்கசுநோய் பரவும் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. இந்த நோய் நிலையைக் கட்டுப்படுத்த விவசாயிகள் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவேண்டும். பங்கசு நோய்க்கான அறிகுறிகள் தென்படின் உடனடியாக தங்கள் பகுதியிலுள்ள விவசாய போதனாசிரியர்களைத் தொடர்புகொண்டு ஆலோசனை பெறவேண்டும் என விவசாய திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ச-17)

# கும்பாபிஷேகம்

கொடிகாமம், பெப். 5

தென்மராட்சி கொடிகாமம் வடக்கு குருவிச்சான் அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. (ம-159)

# தைப்பூச நாளில் மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம், பெப். 5

அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வீதியில் தைப்பூசத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-159)

# தைப்பூசத் திருநாள் பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.5

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூச திருநாளை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்புப் பூசை அபிஷேகம் என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருதல் இடம்பெறும்.

✦ ✦ ✦

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் தைப்பூச தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று மாலை 6 மணிக்கு முருகப்பெருமான் திருமஞ்சத்தில் ஆரோகணிக்கவுள்ளார். (ச-17)

✦ ✦ ✦

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் தைப்பூச திருநாளை முன்னிட்டு இன்று காலை 8 மணிக்கு சிறப்பு பூசை அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன. (ச-17)

✦ ✦ ✦

இணுவில் கந்தசுவாமி கோயிலில் தைப்பூச திருநாளான இன்று காலை 5.30 மணிக்கு சிறப்புப் பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து 9.30 மணிக்கு பொங்கல் திருவிழா இடம்பெறும். மாலை 6 மணிக்கு பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார். (ச-17)

✦ ✦ ✦

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய தைப்பூச உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

“அறிவுக்கூர்மையை விட நமக்கு அதிகம் தேவை இரக்க உணர்வும் கண்ணியமும்”

– சார்லி சப்ளின்


# வெந்தபுண்ணில் வேலாக...

வடமாகாணத்திலும் இலங்கையிலும் இந்த ஆண்டு பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான ஏதுநிலைகள் தாராளமாக உருவாகியிருக்கின்றன. வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த காற்றழுத்தத் தாழ்வுமையத்தால் வடக்கு மாகாணத்தில் கடந்த புதன்கிழமை பின்னிரவு முதல் வெள்ளிக்கிழமை நண்பகல் வரையில் கொட்டித்தீர்த்த கனமழையால் பலநூறு ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அழிவடைந்திருக்கின்றது. இலங்கையின் இதர பகுதிகளிலும் இதே துயர்க்கதைதான். இந்தப் பேரழிவுகள், இந்த ஆண்டு நெல்லுற்பத்தியில் தன்னிறைவு காணும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும், பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்சி கிட்டாதபோதிலும் குறைந்தபட்சம் உணவுப் பஞ்சத்தையாவது தவிர்க்கலாம் என்றிருந்த பொதுமக்களின் ஒற்றை நம்பிக்கைக்கும் சம்மட்டியடியாக விழுந்திருக்கின்றன.

விவசாயமொன்றும் செங்கம்பளப் பயணமல்ல. அது கரடுமுரடான கற்களும் முட்களும் நிறைந்தது. அதிலும் இலங்கையில் விவசாயியாக இருத்தலென்பது கத்திமுனை நடைதான். இந்தப் பெரும்போகத்துக்காக விவசாயிகள்பட்ட துன்பங்களும் துயரங்களும் கொஞ்சநஞ்சமல்ல. விதைநெல் பெறுவதிலிருந்து இந்த வலிமிகு யாத்திரை ஆரம்பித்தது. குதிரைக் கொம்பாகவிருந்த உரம், பல மடங்கு எகிறிய விலைக்குப் பெறப்பட்ட கிருமிநாசினிகள் என்று தம்மைப் பணயம் வைத்துத்தான் இலங்கைக்கு உணவூட்டும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டனர். பயிரிடும்போது மட்டுமல்லாமல், பயிர்கள் விளைந்ததன் பின்னரும் வெவ்வேறு வகைகளில் சோதனைகள் விவசாயிகளைப் பின்தொடர்ந்தன. படைப்புழுவின் தாக்கம் மிகையானது, மடிச்சுக்கட்டியும் குறுக்கிட்டது, இதர பங்கஸ் முதலான நோய்த் தாக்கங்களும் பயிர்களை தம்மிஷ்டப்படி அழித்துத்தள்ளின. இப்படியொரு பின்னணியில் விளைநிலங்களில் குருதியை வியர்வையாக்கி சமர்க்களமாடித்தான் பயிர்களை விளைவித்தனர் விவசாயிகள். இந்த விடாப்போராட்டம் இத்துடன் நின்றுவிட்ட கதையுமல்ல.

நெற்கொள்வனவுக்கு பொதுப்பொறிமுறையை அரசாங்கம் உருவாக்காததால், அவற்றை 'அறாவிலைக்கு' சுருட்டி விழுங்கும் இடைத்தரகர்களின் தலையீடு வடக்குமாகாணத்தில் அண்மைக்காலமாகவே அதிகரித்திருந்தது. எனவே நெல்லைச் சந்தைப்படுத்துவதிலும் ஒரு பின்னடைவுக்குள்ளும் – நிலையற்ற தன்மைக்குள்ளும் நின்று உழன்றுகொண்டிருந்தபோதுதான் 'கதையை' மொத்தமாக முடித்துவிட்டிருக்கின்றது வெள்ளம் என்னும் பெரும்பூதம். இங்கே பணயம் வைக்கப்பட்டிருப்பது விவசாயிகளின் முதலீடோ, அவர்களின் உடலுழைப்போ மட்டுமல்ல. உணவுக்கான இலங்கையர்களின் ஏக்கமும், பொருளாதாரப் பேரிடரைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கு இருந்த ஒற்றைப் பிடிமானமும்தான். இந்தப் பயிரழிவுக்கு – உடலுழைப்பையும், பண முதலீட்டையும் தாராளமாகக் கொட்டியும் இலவு காத்த கிளிகளாக மாறியுள்ள விவசாயிகளின் உடலுழைப்புக்கு என்ன பதிலை வழங்குவது என்ற கேள்விக்குப் பதில்தேட வேண்டிய கட்டாய நிலையில் அரசாங்கம் தற்போதிருக்கின்றது.

எந்தநாடு விவசாயத்தில் பொதுக்கொள்கையை – சிந்தனையை தெளிவாகக் கொண்டிருக்கின்றதோ, அந்த நாடுதான் எதிர்காலம் குறித்தான துல்லியத்தன்மையை தன்னகத்தே கொண்டிருக்கும். நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணப்படும். இதை இலங்கை கைவிட்டுக் கனகாலம். இந்த இழிநிலையால்தான் இலங்கை இறப்பின் நாள்களை எண்ணிக்கொண்டிருக்கின்றது – வாழ்வதற்கான போராட்டத்தில் இதர தேசங்களை நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. குறைந்தபட்சம் விவசாயிகளின் காயங்களுக்கு மருந்திடுவதற்கேனும் – இழப்பீடு வழங்குவதற்காகவேனும் போர்க்கால அடிப்படையில் அரசாங்கம் செயற்படவேண்டும். கோத்தாபய அரசாங்கம் முன்னெடுத்த வினைத்திறனற்ற விவசாயக் கொள்கைகளால் ஏற்கனவே விவசாயிகள் நொந்துபோயிருக்கின்றனர். இந்தப் பெரும்போகமும் 'வெந்த புண்ணில் வேலாக' அவர்களை மேலும் வதைப்பதை அனுமதியாதிருப்பதுதான் குறைந்தபட்ச மனிதாபிமான நடவடிக்கையாகவும் அமையும். அல்லாதுவிடின் இதனால் ஏற்படும் பேரிழப்புக்கள் விவசாயிகளுக்கு மட்டுமானதாக இருக்காது.




# 13 ஐ நடைமுறைப்படுத்த பொதுவாக்கெடுப்பு நடத்துக!

## கம்மன்பில வலியுறுத்து



கொழும்பு, பெப். 5

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தேவையா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கு பொதுவாக்கெடுப்பை அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள். அதைத் தீர்மானிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளதே தவிர ஜனாதிபதிக்கு இல்லை – இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும்போது இலங்கை இயல்பாகவே சமஷ்டி யாட்சி முறையிலான நாடாக அங்கீகரிக்கப்படும். 69 இலட்ச மக்கள் சுபீட்சமான கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து கோத்தாபய தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். கோத்தாபய சுபீட்சமான இலக்கு கொள்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பதிலாக 'பஸில் ராஜபக்சவின் இலக்கு' கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் நாட்டு மக்கள் ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபயவை விரட்டியடித்தார்கள். அதன் பின்னர் பெரமுனவால்தான் ரணில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆகவே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு வழங்கப்பட்ட ஆணைக்கு இணங்கவே ஜனாதிபதி ரணில் செயற்பட முடியும். அதைத்தாண்டி அவர் செயற்பட முடியாது. 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து பதவிவகித்த அரச தலைவர்கள் எவரும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை, ஏனெனில் இதன் பாரதூரத்தை அவர்கள் நன்கு அறிவார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் பிரதிநிதியல்லர். ஆதலால், இதன் பாரதூர தன்மையை அறிந்து கொள்ளும் தேவை அவருக்கு இல்லை.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதே தனது முக்கியமான பொறுப்பு என ஜனாதிபதி குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண இவர் கடந்த ஆறு மாத காலமாக எதனையும் செய்யவில்லை. பேச்சளவில் மாத்திரம் மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக்கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அதற்கு அவர் மக்கள் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் - என்றார். (ம)

நாளை 06.02.2023 திங்கட்கிழமை தை 23

சுபநேரம் : 12.35 – 02.05
ராகுதாலம் : 08.05 – 09.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை போராட்டக்காரரும் தமிழருக்கு ஆதரவளிக்க வேண்டும்

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.5

ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கு தென்னிலங்கையில் போராடுவோர் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் ஆட்சியமைப்பு முறை மாற்றியமைப்பதற்கு அவர்கள் வழிவகுக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்தை 200 மில்லியன் ரூபா செலவில் கோலாகலமாகக் கொண்டாடவுள்ளது.

பொருளாதார நெருக்கடி மத்தியில் இவ்வாறான ஒரு கொண்டாட்டம் தேவைதானா? எனத் தெரிவித்து சுதந்திரத்தை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது கத்தோலிக்க திருச்சபை. பல்வேறு சிவில் அமைப்புக்கள் மற்றும் வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இணைந்து சுதந்திரதினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி ஆர்ப்பாட்டப் பேரணியில் அணிதிரளவுள்ளது.

தென்னிலங்கையில் ஜனநாயக எழுச்சியை மீள கொண்டுவர போராடும் இளையோரும் தமிழ்மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையிலே ஆட்சி அமைப்பு முறையை மாற்றியமைப்பதற்கு ஒன்றிணைந்து ஆதரவளிக்க வேண்டும்- அங்கீகரிக்க வேண்டும். இதன் மூலமே நாட்டின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கும் தீர்வை எட்டமுடியும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(ச-20)

> “பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறானதொரு கொண்டாட்டம் தேவைதானா?”


## காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் A9 வீதிக்கு அருகாமையில் 10 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு.

0774384866



## British Business College

தைபூசம் அன்று அனுமதி வழங்கப்படும்

BBC

For a Brilliant Future

B.B.C 25வது வருடத்தில்

யாழ் குடா நாட்டில் குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற 25 ஆண்டு கால சேவை கொண்ட BBC யில் உங்கள் குழந்தையை இணையுங்கள்.

யாழ் குடா நாட்டில ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School | கற்பித்தல் மொழி |
|---|---|---|---|---|
| | 2+ முதல் | 3+ முதல் | 4+ முதல் | ஆங்கில மொழிமூலம் |
| | 3+ வரை | 4+ வரை | 5+ வரை | தமிழ் கட்டாய பாடம் |

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

அனைத்துக் குழந்தைகளும் பங்கேற்கும்

- Sport meet
- English Day concert
- முத்தமிழ் விழா
- Carols
- Pre School Graducation



பாடவிதானமும் கற்பித்தல் முறையும்

New Syllabus

Dr.Mara Montossori Method

Canadian Ece Method

German LKG.KG.UKG System

எமது கற்பித்தல் முறையும் பாடவிதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைகளைச் சார்ந்து எமது கல்வித்திட்டத்திற்கு அமைய வடிவமைக்கப்பட்டுள்ளது

இல. 653 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

பருத்தித்துறை வீதி, மாலு சந்தி, கரவெட்டி.

இல. 373 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

5ம் வட்டாரம் பிரதான வீதி சங்கானை

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்

சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை (அருகாமையில்) சாவகச்சேரி.

அளவெட்டி ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்பாக

மானிப்பாய் , ஆலடிச்சந்தி , மானிப்பாய்.


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் நவரட்ணம்

யாழ். இந்துக்கல்லூரி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நவரட்ணம் நேற்று (04.02.2023) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின நல்லடக்க ஆராதனை இன்று (05.02.2023) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

37,இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
076 6424 719

# வடமாகாணத்தினுள் அடையாளப்படுத்தப்பட்ட பாதைகளில் பேருந்து வழியனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தேவையான தகைமைகளை கொண்டுள்ள பேரூந்து உரிமையாளர்களிடம் இருந்து கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகளில் பேரூந்து சேவைகளை வழங்குவதற்கான வழியனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு கோருகின்றது.

| இல | பாதை விபரம் | மீளளிக்க முடியாத வைப்பு | மீளளிக்கபட கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 01 | வெலிஓயா – முல்லைத்தீவு (நெலும்வெவ நெடுங்கேணி தண்டுவான் தண்ணீரூற்று ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 02 | நீர்வேலி - யாழ்ப்பாணம் (அச்செழு-புன்னாலைகட்டுவன் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 03 | மல்லாவி - யாழ்ப்பாணம் (தென்னியங்குளம்,அம்பலப்பெருமாள்-அக்கராயன்-ஸ்கந்தபுரம்-கிளிநொச்சி ஊடாக) | 3000.00 | 10000.00 |
| 04 | இரணைஇலுப்பைக்குளம் - மடு (காக்கையன்குளம், முள்ளிக்குளம், விளாத்திக்குளம், பரசன்குளம் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 05 | அம்பலவன்பொக்கணை – முல்லைத்தீவு (புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு, மாஞ்சோலை ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 06 | திருமுறிகண்டி – மல்லாவி (கொக்காவில்,புத்துவெட்டுவான்,ஐயன்குளம், தேறாகண்டல், துணுக்காய் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 07 | முத்தையன்கட்டு – மாங்குளம் (ஒட்டிசுட்டான் ஊடாக) | 2000.00 | 5000.00 |

**கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு**

01. விண்ணப்பதாரி வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச்சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களாவது வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதனை வாக்காளர் பட்டியல் மூலம் உறுதிப் படுத்தல் வேண்டும்.

02. விலைமனு கோரல் விண்ணப்பப்படிவங்களை 08.01.2023 ஆந் திகதி முதல் இல-45, றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் காலை 9:00 மணியில் இருந்து மாலை 3:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 01.03.2023ஆந் திகதி மாலை 3.00. மணிக்கு முன்னர் பெறுகைக்குழு தலைவர், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை. இல-45, றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது. நேரடியாகவோ பொது முகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பாதை விபரம் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி திறத்தல்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.15 இற்கு இடம்பெறும்.

தலைவர்.
பெறுகைக்குழு,
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PURSUE IMMIGRATION CONSULTING SERVICES

RCIC Regulated Canadian Immigration Consultant

May Your Canada Immigration Dreams Come True

- STUDY VISA
- WORK VISA, LMIA
- PERMANENT RESIDENCY
- PNP APPLICATIONS
- CITIZENSHIP APPLICATIONS
- BUSINESS INVESTORS
- SELF-EMPLOYED CATEGORY
- FAMILY SPONSORSHIPS
- VISITOR/SUPER VISA
- REFUSAL CASES AND APPEALS
- PR CARD RENEWALS
- REFUGEE CASES

Contact Us:

0016479893136/0016472053136

vicky.aingkaran@gmail.com

30 Via Renzo Drive, Richmond Hill, ON, L4S 0B8, Canada



VICKNESWARY AINGKARAN, MSC
REGULATED CANADIAN IMMIGRATION CONSULTANT
COMMISSIONER OF OATHS

## UNIVERSAL RECRUITING SERVICES

மாணவர் ஆட்சேர்ப்பு மற்றும் விசா சேவைகள்

கனடா, அமெரிக்கா, லண்டன், ஆஸ்திரேலியா மற்றும் அயர்லாந்து

வேலைவாய்ப்புக்கள் மற்றும் விசா சேவைகள்

Farm workers -IELTS தேவையில்லை
Nurses
Personal support workers
Mechanics and automotive body shop workes
And more jobs

எங்களை தொடர்பு கொள்ள:
Muthukumaru Aingkaran- Recruiter
30 Via Renzo Dr, Richmond Hill, ON, L4S 0B8, Canada.
Tel: 0016472053136/ 0016479893136
Email: univerrecruit@gmail.com

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் போட்டோ கொப்பிக் கடைக்கு வேலை தெரிந்த / பழக விரும்பும் ஊழியர் தேவை.

076 832 3682 (CS/23288) 4.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் பிரபல நிறுவனத் தின் யாழ். முகவரும் தனியார் நிறுவன உரிமை யாளருமான 37 வயதுடைய மூல நட்சத்திரம் கிரக பாவம் 15 கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு :077 847 0476 (CS/23294) (3/6)

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில் மந்திகை வைத்தியசாலை யில் இருந்து 500m தூரத் தில் அமைந்துள்ள வீடு வாட கைக்கு உண்டு. அரச ஊழி யர்கள் விரும்பத்தக்கது.

T.P: 076 464 4565 (CS/22906) 4.6)

## பராமரிப்பாளர் (பெண்) Caretaker (Female)

ஜா-எல நகருக்கு அருகில் உள்ள வீட்டிற்கு 2 குழந்தைகளை கவனித்துக் கொள்ளக்கூடிய பராமரிப்பாளர் பெண் ஒருவர் தேவை.

தகைமைகள் :

- பாடசாலை வேலைகளுக்கு உதவுதல் (தரம் 5 & 3)
- வீட்டு வேலைகளுக்கு உதவுதல்
- ஆங்கில அறிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும்

தொடர்புகளுக்கு :0755 309 716

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூரை அண்டிய பிரதேசத்தில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

077 889 5525 (CS/23286) 4.6)

## பெண் வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றுக்கு 18 - 30 வயதுடைய பெண் தேவை.
சம்பளம் 35,000/= (CS/23289) 4.6)

075 988 1000, 077 937 0000

## விற்பனைக்கு

வீடு கட்ட உகந்த கொங்கிறீட் கற்கள் விற்பனைக்கு 128/=

தொடர்பு :077 750 6085 (CS 23291) (3/6)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல பெண்கள் விடுதிக்கு கீழ்வரும் வேலைவாய்ப்புகளுக்காக நேர்முகத்தேர்வு 06.07 - 02-2023. முற்பகல் 10.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

i) விடுதி மேற்பார்வையாளர் (பெண்)
O/L அல்லது A/L தகைமை
வயது 30-40 வயதிற்குட்பட்டவர்கள்.
ii) விடுதி பராமரிப்பாளர்கள் (பெண்)
வயது 30-40 வயதிற்குட்பட்டவர்கள்.

* அடையாள அட்டை (NIC) பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
* கவர்ச்சிகரமான சம்பளம்.

தொடர்புகளுக்கு: 076 378 4109

## சேலை விற்பனைக்கு

கொழும்பு கொட்டாஞ்சேனையில்

காஞ்சிபுரத்திலிருந்து

நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட உயர்ரக கூறைப்பட்டுகள், கல்யாணபட்டு புடவைகள்,பல வர்ணங்களில் border less பட்டுகள், cotton sarees அனைத்தையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப அமைதியான சூழலில் ஆறுதலாக தெரிவு செய்ய விசாலமான parking வசதிகளுடன் கூடிய

கற்பகம்ஸ் Silks யை

தொடர்பு கொள்ளுங்கள்

0777943318 | 0770463365 | 0771702786

சிவமயம்

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

# தைப்பூச மஞ்சத்திருவிழா

இன்று (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை



காலை : 5.30 மணிக்கு பால்குட பவனி ஆரம்பம் இணுவில் மருதனார் மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து .... (பால், குடம், ஆலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது)

காலை : 9.30 மணிக்கு மாபெரும் பொங்கல் ஆரம்பமாகி 2.30 மணிக்கு நிறைவு (பொங்கல் பொருள்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு)

இரவு : 6.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வரும் நிகழ்வும், தமிழரின் கலை கலாசார நிகழ்வுகளான கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம், பொம்மல் ஆட்டம், ஒயிலாட்டம், பறை இசை, உடுக்கிசை, மயிலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

உலகப் பெரும் மஞ்சம் வடம் தொட்டிழுக்க அனைவரும் வாரீர்

விளம்பர அனுசரணையாளர்கள்

## ஐங்கரன் வெதுப்பகம்

பேக்கரி உற்பத்திகள்

பாண், பணிஸ், பிஸ்கட், கேக் வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

இணுவில் தெற்கு, துரை வீதி.

## SAKTHIVEL HARDWARE

சகல விதமான கட்டடப் பொருட்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

K.K.S Road, Kondavilwest, Kondavil (Inuvil)

Tel : 021 492 1213, 14,15,
Mobil : 077 410 9071,077 624 7130,
Fax : 021 224 1436

## KATYU GROUP

KATYU GROUP

CONSTRUCTION | DESIGN | CONSULTANT


K.K.S, Road, Inuvil, Jaffna. | + 94 778 155 233 | KatyuGroup

(CS/22900) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
30 - 05 - 1963



இறப்பு
03 - 02 - 2023

## சுந்தரம்பிள்ளை தனபாலசிங்கம்
## (பூநகரி சந்திரன்)

பூநகரி நல்லூர், சாமிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி டச்சுவீதியை, வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (03.02.2023) வெள்ளிக்கிழமை இயற்கை யெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மகனும், வேதாரணியம் - யோகம்மா தம்பதிகளின் மருமகனும், வதனாவின் அன்புக் கணவரும், கயலினி (சுவிஸ்), கிருஷாந் (ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), யதுர்ஷா (ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கபில்ன் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், விகானின் அன்புப் பேரனும், பூபாலசிங்கம், பாலசிங்கம், இரத்தினசிங்கம், இந்திராதேவி, சுதர்சன், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, யோகராசா ஆகியோரின் சகோதரனும், வசந்தா, வனிதா, ஆனந்தரூபன், ஆனந்தரூபி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2023) திங்கட்கிழமை சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


டச்சுவீதி,
சாவகச்சேரி.

077 224 8406

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 09 - 1946



மறைவு
04 - 02 - 2023

## கந்தசாமி கனகரத்தினம்

கொக்குவில் பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகரத்தினம் நேற்று (04.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி அருள்ம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பிரபாளினி, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன், பிரவீனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்ஷ்மிகரன், அபிநயா, லக்ஷ்மன், லக்ஷியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

906/12, பருத்தித்துறை வீதி,
நல்லூர், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 190 7074

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர் முத்துலிங்கம் சஞ்ஜீவன்

(தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்)



தோற்றம்
01.11.1982

மறைவு
08.01.2023

காயம் பொய்யென்றும்
காற்றடைத்த பையென்றும்
பட்டினத்தார் பாடியதை - நாம்
பல தடவை பாடி நின்றும்
உற்ற நீ ஓய்ந்த போது தான்
உணர்ந்து நின்றோம்!
தொழுகின்றோம்!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளைமறு தினம் (07.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் இரங்கல்கள் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

12, சங்கிலியன் வீதி, நல்லூர்.
077 127 8773, 077 160 6622

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் விழா

யாழ்ப்பாணம், பெப். 5

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது வருட நிறைவையும் நாவலர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது வருட நிறைவையும் முன்னிட்டு ஈஞ்சடி ஞான வைரவர் தேவஸ்தானம், நாவலர் விளையாட்டுக் கழகம், நாவலர் பாலர் பாடசாலை மற்றும் நாவலர் சனசமூக நிலையம் ஆகியவை இணைந்து நடத்தும் நாவலர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாயிலுள்ள நாவலர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக க. ஈஸ்வரநாதபிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ச)


## 2 & 3 bedrooms apartment for sale in wellawatte

GALLE ROADக்கு மிக அருகாமையில்



20 months payment plan available

COMPLETION 2024

தொடர்புகளுக்கு
KURINCHI HOME
+94 76 290 1111
+94 777 044 501

address
541/5, Galle Road, Wellawatte


## தேவை

காலியில் உள்ள கோவில் ஒன்றுக்கு கணக்குப்பிள்ளை மற்றும் உதவியாளர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

(CS/23287) 4/6)

**077 349 3062**

## SOS CHILDREN'S VILLAGES SRI LANKA
## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் மல்லாவி முல்லைத்தீவு

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 71 வருடங்களாகவும் இலங்கையில் 41 வருடங்களாகவும் இயங்கி வருகின்ற அரச மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

DFE இணைப்பாளர் / Coordinator – Direct family empowerment [DFE] ஆண்/பெண் 40 வயதுக்கு உட்பட்டோர்.

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிச்சான்றிதழினை கொண்டிருப்பதோடு குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினை கட்டாயமாக கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிங்களம் பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கத்துடன் 20/02/2023 ம் திகதிக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எமது காரியாலய முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இப் பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

'SOS Children's villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's villages Sri Lanka under stand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross – checking of references.'

தொடர்புகளுக்கு

**எஸ்ஓஎஸ் சமூகவலுவூட்டல் திட்டம்,**
**4 ம் ஒழுங்கை, மல்லாவி. முல்லைத்தீவு.**
**தொ.பே 0212283580, 0773188804**

## முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை

**கரம்பொன் மேற்கு முருகமூர்த்தி கோவில் அருகாமையில் அமைந்து இருக்கும் 60 ஆண்டுகள் பழைமைவாய்ந்த முன்பள்ளிக்கு ஆசிரியர்கள் தேவை**

சம்பளம் அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

உங்கள் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:

**க.குகநேசன்**
**ச.சீறிறங்கநாதன் +94 777739185**
**+94 (71) 805 4598**

(cs.20280) (2/7)

## நாய் விற்பனைக்கு

10 வாரங்கள் நிரம்பிய டோமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**076 678 9158**

## கடை வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் கடையுடன் கூடிய காணி வாடகைக்கு உண்டு.

**T.P : 076 907 8097**

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் சப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**077 6710 448**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி – 90 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281** (NE CS 22909) (3/6)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் சமூகப்பணி மீள ஆரம்பித்தல் மற்றும் பஸ்தரிப்பிடம் திருத்த வேலை தொடர்பான விசேட பொதுக்கூட்டம் இடம்பெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.**

## விற்பனைக்கு

ஹீரோ. பிளசர். 2019 ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு

(CS 23292) (3/6)

**தொடர்பு : 077 163 2061**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து 500m இற்குள் A-9 வீதியில் 2பரப்பு காணி விற்பனைக்குண்டு. றோட்டுப்புற எல்லை 15.75m அகலமுடைய நிலப்பரப்பு. வியாபாரம் அல்லது குடியிருப்புக்கு ஏற்றது. அதிகூடிய கேள்வி விலை கவனத்தில் கொள்ளப்படும். தரகர்கள் தேவையில்லை.

**தொடர்பு : 077 805 2520**


## VAJIRA HOUSE



திருப்தியடைந்த வாடிக்கையாளர்களின் VIDEOS ✓ பார்வையிட

வஜிர ஹவுஸ் இணையத்தில் உள்நுழைக ✓


www.vajirahouse.net

(வாழ் நாள் உத்தரவாத வீடுகள்)

உங்கள் நிலத்தில் வீட்டை கட்டி கொள்ளலாம்

→யாழ்ப்பாணம் →வவுனியா கண்டி
→மன்னார் →கொழும்பு முல்லைத்தீவு

~~109 lakhs~~ 99 lakhs



ரூ.10,000 செலுத்தி வீடு வேலையை ஆரம்பிக்கலாம் (வாழ் நாள் உத்தரவாத வீடுகள்)

இன்றே அழையுங்கள் Ms.Sanjeevkumar 24 hrs 0719 228 888




Vajira House staff

1916 ம் ஆண்டு தொடக்கம் 106 வருட 4 தலைமுறையாக பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய

வஜிர ஹவுஸ்

23, டீல் பிளேஸ் A.கொள்ளுப்பிட்டி.


## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர (முழு நேரம் / பகுதிநேரம்) வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**1). மெசின் மைண்டர்**
**2). உதவியாளர் (பழகவிரும்புவர்களும்) தேவை.**

ஆர்வமுள்ளவர்கள் நாளை (06.02.2023) திங்கட்கிழமை காலை 09.30 - 11.30 மற்றும் மாலை 05.30 - 07.30 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**

இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கட்டப்பிராய் சந்தி (பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து 50m) இல் 3 பரப்பு 3 குழி சுற்று மதிலுடன் கூடிய நன்நீர் கிணற்றை உள்ளடக்கிய காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 757 0280**

## வீடு வாடகைக்கு தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு மாநகரசபைக்கு உட்பட்ட இடம் தேவை.

**T.P.: 076 113 5561**

## பராமரிப்பு

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மூதாட்டி ஒருவரை மகள்போல பார்த்துக் கொள்வதற்கு அன்பும் பொறுமையும் கொண்ட பெண்ணொருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 433 4445** (CR 39200) (3/6)


## மணமகள் தேவை

யாழ் இந்து (V). 47 வயதுடைய 6 1/4 கிரகபாவமுடைய. வெளிநாட்டை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட மணமகனுக்கு பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறோம். மேலதிக தகவலுக்கு **078 824 1134** என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

(CR 39196) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகப் பெருமஞ்சமாம் இணுவைத் திருமஞ்சம்

ஞானஏந்தல் மா.ந.பரமேஸ்வரன்

யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்த தமிழ் சமயப் பண்பாடு மிளிரும் ஒரு கிராமமே இணுவைப் பதியாகும். இந்தக் கிராமத்தின் அழகும் செழிப்பும் ஆரம்பகால அரசியல் குடியியல் நிலைமைகளின் சிறப்பும் வையாபாடல், யாழ்ப்பாண வைபவ மாலை. யாழ்ப்பாண சரித்திரம் போன்ற நூல்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளதை வாசித்து அறியலாம். இவ்வாறு பல மாண்புகளை தன்னகத்தே கொண்ட இக்கிராமம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

இந்தக் கிராமத்தின் கண்ணாக அமைந்திருக்கின்றது எழில் பெருகும் கோபுரங்களும் ஓங்கார நாதமெழுப்பும் கண்டாமணிகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படும் 'பெரிய கோயில்' என வழங்கப்படும் இணுவைக் கந்தன் திருக்கோயில் ஆகும். இவ்வாலயத்தில் சித்தர்களும் ஞானிகளும், சித்தாந்தஞானிமார்களும் எனப் பலர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுள் பெரிய சன்னியாசியார் என சிறப்பாக அழைக்கப்படும், சுப்பிரமணியம் எனும் பெரும் மனிதரால் அமைக்கப்பட்டதே இணுவைக் கந்தனின் திருமஞ்சமாகிய உலகப்பெருமஞ்சம் ஆகும். இணுவைக் கந்தனுக்கு ஒரு திருமஞ்சம் அமைக்கவேண்டும் என எண்ணி ...ண்டிய இப்பெருமானாருக்கு அவரது யோக ...டைகயில் இம்மஞ்சத்தின் அமைவு புலப்பட்டது. ...ர் கண்ட காட்சியை நிஜமாக்க உருவாக்க எண்... சித்தா தேவையான மரங்களைத் தனது தொண்...ரின் உதவியுடன் தறித்துச் சேர்த்தார்.

...த சிற்பாசாரியர்களை தேடுவதற்கான முயற்சி ...டுபட்டவேளை அச்செயலை முருகப்பெருமானே ...நின்று நெறிப்படுத்தி அவரது கனவில், குறித்த ...ந்தில் சிற்பாசாரியார் சிலர் ஊர்காவற்றுறை ...முகத்தை வந்து அடைவார்கள். அவர்களை ...ழத்துவா எனப் பணித்தார். குறித்த தினத்தில் ...முகத்தை அடைந்த சித்தர் அங்கு சிற்பாசாரி...ள் கூட்டம் ஒன்று நிற்பதைக் கண்டார். நின்ற ...சாரியர்கள் சித்தரைப் பார்த்து 'அன்று நீங்கள் ...ள் இல்லம் வந்து கூறியபடியே நாங்கள் இங்கு ...ுள்ளோம்' என உரைத்தனர். சித்தர் தான் எங்கு செல்லவில்லையே இது முருகப் பெருமானின் கருணை நாடகமே எனப் போற்றி வியந்து சிற்பாசாரியர்களை இணுவிலுக்கு அழைத்து வந்தார்.

மஞ்ச வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் தவித்து ஏங்கிய சிற்பாசாரியர்களுக்கு இதுவோர் பெருங்களமாக அமைந்தது. இரவு பகல் பாராது தமது கைவண்ணத்தால் கலையமுது படைத்தனர்.

இம் மஞ்சத்தில் காணப்படும் சிற்பவேலைகள் எம் மனக் கண்ணாலே பார்க்க முடியாதவை. கலைக் களஞ்சியமாகத் திகழும் இம் மஞ்சத்தை கண்ணுற்ற கலைநேய ஸ்தபதிகள், சிற்ப விற்பன்னர்கள் மேல் நாட்டு அறிஞர்கள் இதுபோன்ற கலைக்கருவூலத்தை நாங்கள் எங்கும் கண்டதில்லை. இனியும் காண்பது சந்தேகமெனப் பரவசத்தோடு கூறுவர்.

இத் திருமஞ்சத்தில் முருகப்பெருமான் வருடத்தில் இருமுறை பவனி வருவார் ஒன்று தைப்பூசத் திருநாள் மற்றையது மகோற்சவத்தின் பன்னிரண்டாம் நாள் ஆகும். பெருமான் சண்முகரைத் தாங்கிவரும் இம் மஞ்சபவனியைப் பார்ப்பதற்கு ஆயிரம் கோடி கண்கள் போதாது. இம்மஞ்சத்தில் காணப்படும் கொத்து வேலைகளும் சிவன், பிரம்மா, விஷ்ணு போன்ற தெய்வங்களும் அந்தந்த தெய்வங்களுக்கான புராண, இதிகாசக் கதை அம்சங்களும் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய திருமஞ்சத்தில் எப்பெருமான் இரவுவேளை பவனிவருவார். பகல்வேளை பாற்குடப் பவனி, காவடி பவனி என்பவற்றுடன் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று தொடர்ந்து அன்பர்களின் பொங்கல் கைங்கரியங்களையும் ஏற்ற எம்பெருமான் சூரனது தம்பி நாரகனது கிரவுஞ்சகிரியைப் பிளந்து தாரக சம்சாரம் செய்த தைப்பூசத் திருநாளில் எங்களது தீவினைகளை துவம்சம் செய்து அருள்தர வருகிறார் மஞ்சமேறி. வாரீர் அவன் அருள் பெற்று உய்வீர்.

# தன்னேரில்லாத தகைமை வாய்ந்த தைப்பூச நன்னாள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய திருக்குமாரர் முருகப்பெருமானுக்குரிய சிறப்பான தன்னேரில்லாத் தகைமை வாய்ந்த தைப்பூச நன்னாள் இன்றாகும். இந்த நாள் புனிதமும் புண்ணியமும் நிறைந்த மிகவும் சிறப்பான திருநாளாகும்.

"தைப்பூசங் காணாது போதியோ பூம்பாவாய்" என்று ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியதிலிருந்து இதன் சிறப்புப் புலனாகின்றது. அழகன் முருகன் அருள்பெற்றுய்ய இந்தத் தைப்பூசம் வழிகாட்டுகின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தனிப்பெருங்கடவுளான முருகக் கடவுளைக் குறித்து விரதமிருந்து வழிபாடு செய்கின்ற இன்றைய தைப்பூசம் பொதுவாக எல்லா ஆலயங்களிலும் கொண்டாடப்படுகின்றது.

தமிழ் மக்களின் தனிப்பெருந் திருநாளாக விளங்கும் இந்தத் தைப்பூச விரதத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர் இன்று காலை எழுந்து நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, சந்தியாவர்தனம் முடித்து விநாயகர் வணக்கத்துடன் விரதத்தை ஆரம்பிக்கலாம். உண்மையான பக்தியுடன் நெற்றியில் நீறணிந்து சிவசிந்தனையுடன் இருக்க வேண்டும். தீயவஞ்சனைமிக்க எண்ணங்கள் மனதிலே வரக்கூடாது. நாயன்மார்கள் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகளைப் பாராயணஞ் செய்துகொண்டு ஆலய தரிசனம் செய்ய வேண்டும். புத்திரபாக்கியம் இல்லாதவர்களும் திருமணம் நிறைவேறாதவர்களும் தைப்பூச விரத நோன்பிருந்தால் காரியம் கைகூடும் என்று சொல்லப்படுகிறது. இந்தியாவிலே ஆறுபடை வீடுகளிலும் இன்றைய தைப்பூசம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கையிலும் கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் முதலாய கோயில்களிலும் இன்று தைப்பூசம் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆதலால் சைவசமயிகளாகிய மக்கள் ஒவ்வொருவரும் இன்றைய தைப்பூசத் திருநாளை முறையாகக் கடைப்பிடித்து சதுர்வித புருஷார்த்தங்களை அடைத்து நல்வாழ்வுக்கு அடிகோலுமாறு அழைக்கப்படுகின்றனர். இன்று கொண்டாடப்படும் தைப்பூசத் திருநாளானது சின்னஞ்சிறு பாலர்களுக்கு ஏடு தொடங்குகின்ற வித்தியாரம்ப வைபவமும் பெண் சிறார்களுக்கு 'கர்ணவேதனம்' எனப்படுகின்ற காதுகுத்துகின்ற சிறப்பு மங்கள நிகழ்வும் ஆரம்பித்து வைக்கும் பெருநாளாவும் விளங்குவது மற்றுமோர் சிறப்பம்சமாகும். முருக வழிபாட்டுக்குரிய திருநாளாகக் கருதப்படும் இந்தத் தைப்பூசம் தமிழர் தம் வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தி நல்வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டும் என்பதே எம்முடைய நோக்கமாகும்.

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Darley Butler 175 ANNIVERSARY 1848–2023

# 75 ஆண்டுகால சுதந்திரம்
# 175 ஆண்டுகால மக்கள் சேவை



Darley Butler

Since 1848

Amritha LAXAPANA BIO Clean DENTA Cow & Gate Herbal Dreams DCL Hela

Candy Man Sunny Softny Cutee All Out FRIENDS ADULT DIAPERS BIC HACKS NINJA Teepol

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

வற்றில் கட்டியவாறு யாழ். நகரப் பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்தை விளை விக்கும் வகையில் நடு வீதியில் ஒரு சிறு கும்பல் அச்சமூட்டும் வகையில் பயணித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரால் அழைத்து வரப்பட்ட சிறு கும்பலே யாழ். நகரப் பகுதியில் இலங்கையின் சுதந்திரநாள் கொண்டாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து இவ்வாறு குறளி வித்தை காட்டியது. மோட்டார் சைக்கிள்களில் வீதி முழுவதையும் ஆக்கிரமித்து இலங்கையின் தேசியக் கொடியுடன் இந்தக் கும்பல் வலம் வந்தது. அந்தக் கும்பலோடு முச்சக்கர வண்டிகளும் பவனி வந்தன. (அ-ஓ-இ)

## பல்கலையில்...

ணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கறுப்புக் கொடி பிரதான கம்பத்தில் ஏற்றப்பட்டது. அத்துடன் பல்கலைக்கழகச் சூழலிலும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டது. (அ-ஓ-20)

## வடக்கிலிருந்து....

பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்கமைத்த பேரணியில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள் பிளவு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு வரும் சூழலில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெறும் போராட்டத்தை புறக்கணித்து மாணவர்களின் பேரணியில் பங்கேற்றமை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரே இவ்வாறு கலந்து கொண்டனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்துகொண்டிருந்தார். (அ-ஓ,5)

## தமிழரசுக்...

தின் அடையாளமாக குல்லா தொப்பி அணியப்பட்டது. பேரணியில் கலந்து கொண்ட தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் குல்லா தொப்பி அணிந்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக 2014ஆம் ஆண்டு மாவை.சோ.சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டதையடுத்து அவர் முதன் முதலில் கட்சித் தலைமையகமான மார்ட்டின் வீதி அலுவலகத்துக்கு வரும் போது தொண்டர்களால் குல்லா தொப்பி அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,5)

## முள்ளிவாய்க்காலில்...

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பேரணி ஏ- 9 வீதியூடாகச் சென்று வவுனியா மற்றும் மன்னாரிலிருந்து வரும் எழுச்சிப் பேரணி அணிகளையும் இணைத்துக்கொண்டு மு.ப. 10.30 மணிக்கு முல்லைத்தீவு நோக்கிப் புறப்படும்.

புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை சென்றடையும் பேரணி அங்கிருந்து முள்ளிவாய்க்கால் செல்லும். முள்ளிவாய்க்காலில் உறுதியுரை எடுத்துக் கொண்டு முல்லைத் தீவைச் சென்றடையும். ஊடறுத்துச் செல்லும் அனைத்து ஊர்களிலும் அணிதிரளும் மக்களுடன் எழுச்சியாக முன்னேறி முல்லைத்தீவை சென்றடைவதுடன் இரண்டாம் நாள் பேரணி நிறைவுக்கு வரும். (அ-ஓ,5)

## சுதந்திரதின...

வர்கள் உட்பட 31 பேர் மயங்கி விழுந் துள்ளனர். இலங்கையின் சுதந்திரநாள் கொண்டாட்டம் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. இதில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பிரதான நிகழ்வான அணிவகுப்பு முடிந்த பின்னரும் , அதில் பங்கேற்ற பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்பு படையினர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு அதிகமாக அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இதனால் கடும் வெயில் தாக்கம் காரணமாக 28 மாணவர்களும், 3 சிவில் பாதுகாப்பு படையினருமாக 31பேர் மயக்கமடைந்தனர். அவர்களை உடனடியாக செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் மற்றும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையினர் இணைந்து அழைத்துச் சென்று முதலுதவி வழங்கினர். இந்த நிலையில் பாடசாலை மாணவர்கள் மயங்கி விழுவதை அதிதியாகக் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு ஊடகவியலாளர்கள் கொண்டு சென்ற போதிலும் , அவரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பின்னரும் மேலும் பல மாணவர்கள் மயங்கி விழுந்தனர். அதிதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் அனைவரும் மாணவர்கள் மயங்கி வீழ்வதைக் கண்டு முகம் சுழித்தனர். (அ-ஓ,18,110)

## ஒற்றையாட்சிக்குள்ளே..

ரணில் விக்கிரமசிங்க.

இலங்கையின் 75ஆவது சுதந்திர நாளை முன்னிட்டு நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவரது உரையில் முக்கியமாகத் தெரிவித்தமை வருமாறு:-

நாட்டின் தற்போதைய நிலைக்கு நாம் அனைவரும்குறைவாகவோஅதிகமாகவோ பொறுப்புக் கூற வேண்டும். நாம் யாரும் விரல் நீட்டி ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது. நாம் ஆரம்பத்திலிருந்தே தவறு செய்தோம். அந்த தவறைச் சரி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பாடுபட்டோம். ஆனால் நூறு சதவீதம் சரி செய்ய முடியவில்லை.

### பிளவுபட்டோம்

சுதந்திரம் பெறுவதற்கு டி.எஸ். பின்பற்றிய வழிமுறை, இலங்கையர் அனைவரையும் ஒன்றிணைப்பதாகும். ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நாங்கள் பிளவுபட்டோம். பல்வேறு குழுக்கள், அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தின. அதிகாரத்துக்காக மேலும் மேலும் பிளவுகளை ஏற்படுத்தினர். நாம் அவர்களை நிராகரிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு அதிகாரம் அளித்தோம்.

அரசியலில் உண்மையைச் சொல்லாமல் பொய் சொன்னார்கள். உண்மையைச் சொன்ன அரசியல்வாதிகளை மக்கள் நிராகரித்தனர். நாட்டின் உண்மை நிலையைச் சுட்டிக்காட்டி அதற்கான பரிகாரம் தேடுபவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பொய்களால் மகிழ்விப்பவர்களுக்கு அதிக அங்கீகாரம் கிடைத்தது. நாம் வாக்குறுதி அரசியலில் சிக்கிக்கொண்டோம். எங்களுக்குச் சொந்தமில்லாத கடன் வாங்கிய வளங்களை நம்பியிருந்தோம். மேலும் மேலும் கடன் வாங்கினோம்.

### ஆதாயத்துக்கு வாக்களித்தோம்

நம்மில் பெரும்பாலானோர் வாக்களித்தது நாட்டுக்காக அல்ல. எங்களுக்கு தொழில் பெற , பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு,விலைமனுக் கோரலுக்கு அனுமதி பெற நாம் வாக்களித்தோம். தனிப்பட்ட ஆதாயத்துக்காகவே நாம் தேர்தல் வேட்பாளர்களுக்காக பணியாற்றினோம். நம்மில் பெரும்பாலானோர் தேர்தலில் போட்டியிட்டது கூட நாட்டுக்காக அல்ல,தங்களுக்காக. அதிகாரத்தைப் பெறவும் சலுகைகளை அனுபவிக்கவும் மேலும் சம்பாதித்துக் கொள்ளவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

அரசியல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் கோஷங்களில் தெரிவிக்கப்பட்டவற்றை உறுதிப்படுத்தவும் நாங்கள் மேலும் மேலும் கடன் வாங்கினோம். நாம் அதிகம் அதிகமாக முதலீட்டுக்காக அல்லாமல், நுகர்வுக் காகத்தான் கடன் வாங்கினோம். 'கடன் முதலீட்டுக்காக அன்றி நுகர்வுக்காக அல்ல' என்றுபுத்தரின் போதனைகள் கூறுகின்றன. பௌத்தத்தைப் பற்றி பேசிக்கொண்டு புத்தரை வணங்கி பௌத்த தர்மத்தை தாண்டிச் சென்றுவிட்டோம்.

### மோசமான முன்னுதாரணம்

சிங்கப்பூரை மீளக் கட்டியெழுப்புவது பற்றி அறிந்து கொள்வதற்காக இலங்கை வந்த லீ குவான் யூ பல வருடங்களுக்குப் பிறகு இவ்வாறு கூறினார்.

'தேவையில்லாமல் அரசியலுக்கு முன்னுரிமை அளித்தமையே உங்கள் நாட்டில் இந்த நிலை ஏற்பட காரணம். உங்கள் நாட்டை முன்னுதாரணமாக கொண்டிருந்தால் சிங்கப்பூர் அழிந்திருக்கும்' என்றார்.

உண்மையில், நாம் இப்போது அழிவு நிலையை நோக்கிச் சென்றுள்ளோம். இந்தக் காயத்தைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்களும் உள்ளனர். ஆனால் நான் அதனை விரும்பவில்லை. ஒரு சத்திரசிகிச்சை செய்து இந்த காயத்தை சுகப்படுத்திக் கொள்வோம். இது கடினமானது. ஆனால் அந்த சோகத்தையும் வேதனையையும் சிறிது காலம் அனுபவித்தால், காயத்தை முழுமையாக குணப்படுத்த முடியும்.

### நாடு நாளை இல்லை

இந்த நெருக்கடியைச் சமாளித்து உண்மையான பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை அடைய வேண்டுமானால், நாம் செல்ல வேண்டியது ஒரே ஒரு வழிதான். இந்தக் குழியிலிருந்து ஏறுவதற்கு எமக்கு ஒரே ஒரு ஏணி தான் உள்ளது. அரசியல் நலன்களுக்காக இந்த ஏணியை ஒதுக்கித் தள்ளினால், நமக்கு ஒரு நாடு இருக்காது, நமக்கு நாளை இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறியுள்ளேன். நாட்டின் நலனுக்காக நாம் அந்த இக்கட்டான நிலையை தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் இனிப்புப் பேச்சுகளால் இந்நிலைக்குத் தீர்வு கிடைக்காது. இலவசக் கல்வியினால் இந்நாட்டில் பெருமளவிலான மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தினராக மாறினாலும் இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நாடாக மாறி யுள்ளது. நாம் இந்தப் பொருளாதாரத்தை நவீனமயமாக்கி, உலகிற்கு திறந்துவிட வேண்டும். மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தர ஏழைகளாகவும், தங்கிவாழ்பவர்களாகவும் மாற்றும் ஊழல் அரசியல்வாதத்தையும் தோற்கடிக்க வேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் நீண்டகால மாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் 'சிஸ்டம் சேஞ்ச்' என்ற முறைமை மாற்றம் இது தான்.

### ஒற்றுமை வேண்டும்

அதற்காக எனது அரசாங்கம் புதிய சீர்திருத்தப் பாதையில் பிரவேசித்துள்ளது. அதற்காக எடுக்கப்படும் முடிவுகள் சிலநேரம் வேதனை தருவதாக இருந்தாலும், இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர அந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நாம் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

### அதிகாரப் பகிர்வு

அது போன்றே வடக்கு- கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப் பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும். காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். அது போன்றே ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். நான் முயற்சிப்பது மேலோட்டமாகத் தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலக்காரணியை நிவர்த்தி செய்யவே முயற்சிக்கிறோம். அது சிரமமானது. மிகவும் கடினமானது. எனினும் நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான்.

### வரிசையுகம் முடிந்தது

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து நான் எடுக்க நேரிட்ட பல தீர்மானங்கள் பிரசித்தமான தீர்மானங்கள் அல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் அந்தத் தீர்மானங்களால், இன்று இந்த நாட்டின் எந்தக் குடிமகனும் எரிபொருள் வரிசைகளில் நீரின்றி இறக்கவில்லை, சமையல் எரிவாயு இல்லாமல் பட்டினியில் இல்லை. உரம் இல்லாமல் சாபம் இடவில்லை.

எனவே, அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து இந்தப் புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதில் கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாறலாம்-என்றார். (அ-ஓ,22)


## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையின் முதற்தர நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன. ஓய்வுதியர்களும் விண்ணப்பிக் கலாம். வயதெல்லை 18-65



- கிளை முகாமையாளர்
- குழு முகாமையாளர்
- நிதி ஆலோசகர்

தொடர்புகளுக்கு : 077 560 2579


## மரண அறிவித்தல்

தோற்றம் 11.05.1948

**சோமசுந்தரம் நவரத்தினராசா (மணி)**

மறைவு 04.02.2023



ஆறுகால்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நவரத்தினராசா (மணி) அவர்கள் நேற்று (04.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், இராஜயோகம் அவர்களின் கணவரும், வசந்தி, சொப்னா, ஜோதிகா ஆகியோரின் தந்தையும், குலசேகரம், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் சந்திரசேகரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02. 2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சந்திரசேகரம் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54 கிராம் ஹெரோக்கெய்ன் நபரொருவர் யாழில் கைது

யாழ்ப்பாணம், பெப். 5
உலகில் அதிஆபத்தான உயிர்கொல்லி ஹெரோக்கெய்ன் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் மன்னாரைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 54 கிராம் ஹெரோக்கெய்ன் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் அறிக்கையிட்டுள்ளனர்.
மன்னாரைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவரே வியாபார நோக்கத்துக்காக அதனை வைத்திருந்த நிலையில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.
10 கிராம் உயிர்கொல்லி போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபருக்கான பிணைக் கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றிலேயே முன்வைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.26)



# நல்லூர்க் கந்தன் ஆலய நெற்புதிர் அறுவடை விழா

யாழ்ப்பாணம், பெப். 5
நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை விழா நேற்றுக் காலை கொட்டும் மழைக்குள் இடம்பெற்றது.
தைப்பூசத்தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் இப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்குச் சென்றனர். அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன. இப் புதிர் விழா 289 ஆவது ஆண்டாக இந்த வருடம் புதிர் அறுவடை நடந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

# நூதன முறையில் 'சேறடிப்பு'

முல்லைத்தீவு, பெப். 5
முல்லைத்தீவு நகர் சுற்றுவட்டம் மற்றும் பொதுச் சந்தைப் பகுதியிலும், கிளிநொச்சி நகரப்பகுதியிலும் இரவோடு இரவாக கட்டப்பட்ட இரண்டு 'பனர்களால்' பரபரப்பு ஏற்பட்டது.
இலங்கையின் 75 ஆவது சுதந்திர நாளை கரிநாளாக தமிழர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருக்கும் நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனின் படத்துடன், சுதந்திர நாள் வாழ்த்து 'பனர்கள்' முல்லைத்தீவில் கட்டப்பட்டிருந்தன. அதேபோன்ற பனர்கள் கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதனின் படத்தோடும் கட்டப்பட்டிருந்தன. கரிநாள் போராட்டத்தில் பங்கேற்பதற்காக ரவிகரன் மட்டக்களப்பு பயணமாகியுள்ள நிலையிலும், பல்கலை மாணவர்களின் போராட்டத்துக்கு கரைச்சி தவிசாளர் ஆதரவளித்த நிலையிலும், இவ்வாறு அவர்கள் இருவருக்கும் 'சேறடிக்கும்' வகையில் இந்த 'பனர்கள்' வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர். (அ-ஒ.19)

## அடக்குமுறைகளை...

இலங்கையின் 75 ஆவது சுதந்திர நாளை வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கரிநாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர். அத்துடன் ஹர்த்தாலுக்கும், வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய பேரணிக்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

### பேரணி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலிலிருந்து நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பேரெழுச்சிப் பேரணி உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது. மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் தரப்பினர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
பல்கலைகழகத்திலிருந்து ஆரம்பமான பேரணி கலட்டிச் சந்தியை அண்மித்த போது பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றனர். மாணவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியவாறு முன்னேற பொலிஸார் அங்கிருந்து விலகினர். நாச்சிமார் கோயிலடியை அடைந்த பேரணி அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவேந்தல் இடத்தில் நினைவஞ்சலி செலுத்தியது. அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி ஊடாகச் சென்று ஏ - 9 வீதியை அடைந்தது. யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக பேருந்துகளில் போராட்டக்காரர்கள் ஏறிச் சென்றனர். செம்மணியில் மீண்டும் பேரணி ஆரம்பமானது. செம்மணியில் கொல்லப்பட்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் சாவகச்சேரி நகரப் பகுதி, கொடிகாமம், பளை, ஆனையிறவு, பரந்தன் ஆகிய இடங்களில் பேரணி இடம்பெற்றது. முதல் நாள் நிறைவாக கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் ஆரம்பித்த பேரணி டிப்போச்சந்தியில் நிறைவுற்றது. 'தமிழர் தேசத்தின் ஆக்கிரமிப்பை நிறுத்து' என்ற பிரதான கோஷத்துடன் பேரணி நகர்ந்தது.

### கரிநாள் போராட்டங்கள்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஏற்பாடு செய்த கரிநாள் போராட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது. தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு - கல்லடி பாலத்தின் ஊடாக ஊர்வலம் இடம்பெற்றதுடன் பாலத்தின் இரு மருங்கிலும் சங்கிலி வடிவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊர்வலம் கல்லடிப் பாலத்தின் அருகில் உள்ள மைதானம் வரையில் சென்றது. இறுதிப்போரின்போது வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களுக்கு ஏற்பட்ட நிலைமைகள் குறித்து வீதி நாடகம் நடத்தப்பட்டதுடன் அரசியல் கைதிகள் நிலைமைகள், தமிழர்களின் நிலைமைகள் குறித்த ஊர்திப் பவனியும் இடம்பெற்றது. ஊர்வலத்தைத் தொடர்ந்து கல்லடி பாலம் இறக்கத்தில் உள்ள மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது இருள் சூழ்ந்த சுதந்திர தின உரைகளும் இடம்பெற்றன.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமான பேரணி, ஏ-9 வீதி வழியாக வந்து யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் நிறைவடைந்தது. முல்லைத்தீவு பொதுச் சந்தையிலிருந்து ஆரம்பமான பேரணி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் நிறைவுற்றது. இதேபோன்று மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாகவும் கரிநாள் போராட்டங்கள் இடம்பெற்றன.

### ஹர்த்தால்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரப் பகுதி ஹர்த்தாலால் முடங்கியிருந்தன. அதேவேளை புறநகர்ப் பகுதிகளில் கடைகள் திறந்திருந்ததுடன் வாகனப் போக்குவரத்துக்களும் நடைபெற்றன. வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இயல்பு நிலை பாதிக்கப்படவில்லை. (அ-ஒ.5)

## சுதந்திரநாள்...

முப்படைகளும் தமது அதியுச்ச பாதுகாப்பை வழங்க இலங்கையின் சுதந்திரநாள் நிகழ்வு நடந்தேறியது.
காலிமுகத்திடலில் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் டி.எஸ். சேனாநாயக்கவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு, ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்னால் அமைந்துள்ள தேசிய மாவீரர் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

### பலத்த பாதுகாப்பு

தேசிய சுதந்திரதின நிகழ்வுகளுக்கு உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. காலிமுகத்திடலுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் பெருமளவான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். காலிமுகத்திடலிலிருந்து கொள்ளுப்பிட்டி சந்தி வரையான பகுதிகளில் சில இடங்களில் நீர்த்தாரைப் பிரயோக வாகனத்துடன் கலகம் அடக்கும் பிரிவினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### வெளிநாட்டு இராஜதந்திரிகள்

பாகிஸ்தான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹினா ரப்பானி, ஜப்பான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டகெய் ஷ ன்சுகே, இந்திய வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வ.முரளிதரன், பூட்டான் கல்வி மற்றும் திறன் விருத்தி அமைச்சர் ஜெய்பர் ராய், பொதுநலவாய நாடுகளின் செயலர் நாயகம் பெட்ரீசியா ஸ்கொட்லண்ட், நேபாள வெளிவிவகார அமைச்சர் பிமலா ராயி பௌடியால், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லாஹ் ஷஹீத், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஏ.கே. அப்துல் மூமன் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் கலந்துகொண்டனர்.

### ஜனாதிபதி வருகை

இராஜதந்திரிகளின் வருகையை தொடர்ந்து 8.15 மணியளவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் வருகை தந்தனர். இதன்போது ஜனாதிபதியால் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டு, சுதந்திரதின நிகழ்வுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. 105 பாடசாலை மாணவர்களால் தேசிய கீதமும் ஜயமங்கள கீதமும் பாடப்பட்டது.

### முன்னாள் தலைவர்கள் வரவில்லை

சுதந்திரதின நிகழ்வின் நிகழ்ச்சி நிரலில் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் அவ்விருவரும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. அத்தோடு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோரது பெயர்கள் நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இம்முறை சுதந்திர தின நிகழ்வு முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் பங்குபற்றாத நிகழ்வாக அமைந்துள்ளது. இலங்கையின் சுதந்திரம், தேசிய ஒருமைப்பாடு, இறைமை, ஒற்றுமை என்பவற்றின் நிலைப்பாட்டின் பொருட்டு உயிர் நீத்த சகல தேசாபிமானிகளையும் நினைவுகூருவதற்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அனைவரும் ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்க 21 மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பின்னர் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை, தேசிய மாணவர் படையணி உள்ளிட்டவற்றின் மரியாதை அணிவகுப்பு இடம்பெற்றது. இதில் விமானப்படையைச் சேர்ந்த 3 ஆயிரத்து 284 வீரர்களும், கடற்படையைச் சேர்ந்த 867 வீரர்களும், விமானப்படையைச் சேர்ந்த 695 வீரர்களும், 336 பொலிஸாரும், பொலிஸ் சிறப்பு படையணியைச் சேர்ந்த 220 பேரும், சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த 437 பேரும், தேசிய மாணவர் படையணியைச் சேர்ந்த 546 பேரும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் 21 பேரும், அங்கவீனமுற்ற வீரர்கள் 29 பேரும் கலந்துகொண்டனர். இம்முறை வழமையாக இடம்பெறும் நடனங்கள் இடம்பெறவில்லை.

### பரசூட் சாகசம்

நிகழ்வின் இறுதிக்கட்டத்தில் சுதந்திர நிகழ்வில் முதன்முறையாக முப்படையினர், பொலிஸார் உள்ளிட்டோரால் பரசூட் சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. சுமார் 7 ஆயிரம் அடி உயரத்தில் தேசிய கொடி, முப்படைகளின் கொடி மற்றும் பொலிஸ் கொடியை ஏந்தியவாறு பரசூட் சாகசம் நிகழ்த்தப்பட்டது.

### தமிழில் தேசிய கீதம்

நிகழ்வின் நிறைவில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், றோயல் கல்லூரி, வத்தளை புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்களால் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டது. கடந்த 2020ஆம் ஆண்டின் பின்னர் இம்முறை தேசிய சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனக ரத்நாயக்க மீது குற்றப்பத்திரிகை தயார்

கொழும்பு, பெப். 5

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிராக 14 அம்ச குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றப்பத்திரிகை நேற்றுமுன் தினம் சட்ட வரைவு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சட்ட வரைவுத் திணைக்களத்தின் சட்டத்தின் பிரகாரம் குற்றப் பத்திரிகையை தயாரித்த பின்னர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன அதனை அடுத்த வாரம் 8ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். (ம)


## ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆர்வமுள்ள சகலருக்கும்

From Grade 7 to Graduates

தொழில்புரிபவர்களுக்குமானது.

K.Ganesh B.A 077 766 8725

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த அவுஸ்திரேலிய குடியுரிமையுடைய விஸ்வகுல பூரட்டாதி நட்சத்திரம் 7 இல் செவ்வாயுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

077 385 9450

## English Tuition

English tuition classes for students and adults spoken too by a retired English Teacher individuals or group

contact Number:-

077 130 1080

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் வயதான பெண் ஒருவரை, வீட்டில் தங்கியிருந்து தொடர்ச்சியாகப் பராமரிப்பதற்கும். சமையல் வேலைகளைச் செய்வதற்கும் ஒருவர் தேவை. உணவு மற்றும் தங்குமிடம் இலவசம். அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (ரூபா 50.000 இற்கும் மேல்)

தொடர்பு: 077 120 9998

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, தெல்லிப்பளையில் 8 பரப்புக் காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும். இரண்டு பக்கம் பாதை உள்ளது. (கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறந்த இடம்)

T.P: 075 077 4745

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நல்லூர் பகுதியில் தங்கி நின்று வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.

074 0075 625

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் மருத்துவபீடம்,திருநெல்வேலி சந்தை ரயில் தரிப்பிடத்துக்கு அண்மையாக நல்ல அயலவர்களுடன் சதுரவடிவிலான ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 784 9291
077 991 0523(ராஜ்)

## PHYSICS A/L 2023 & 2024

தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்

வீடு வந்து கற்பிக்கப்படும். ( Home Visit))

❖ Past papers ❖ F.W.C. Papers

070 366 0951 (யாழ் நகர்ப்பகுதி)

## வேலையாள்கள் தேவை

மனநலம் குன்றிய சிறுவனை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு வேலையாள் தேவை. யாழ்.மாவட்டத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

நேரில் சந்திக்கவும். (CS/23273) 4,6)

சங்கானை வீதி, அச்சுவேலி - 077 615 4485

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 255 0807

## வெளிநாட்டு பொதிகள் சேவை

அனைத்து நாடுகளுக்கும்
குறைந்த கட்டணம்
பாதுகாப்பான சேவை

DHL SKYNET aramex

076 071 1016

## Classes

தென்மராட்சியில் + யாழ்ப்பாணத்தில்

உயர்தர உயிரியல்

A/L BIOLOGY

உயர்தர விவசாய விஞ்ஞானம்

தனி மற்றும் குழு வகுப்புக்கள் நடைபெறும்.

070 373 2320

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

மல்லாகம் தரம் - 06 கொக்குவில்

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" நிர்வாகி

## Online Mathematics and Computer Science Tutoring

By Canadian Trained Teacher in Both Tamil and English Medium

Taught By : Mr. Nanthivarman

Credentials : BSc, State University of New York Institute of Technology
BEd, Ontario Institute For Studies In Education
MMT (Pending), University of Waterloo
OCT (Ontario Certified Teacher)

O/L Mathematics
G.C.E A/L Combined Mathematics
Programming in Python / Java / C++

- State of the Art Learning Management Platform
- Readily Available Digital Handouts & Notes
- Ongoing Assessments
- Affordable Tuition Fees
- Free Consultation for Higher Education in Canada.

visit www.mathemperor.ca
for further details:
Whats App contact :
+1416 821 9591

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், 1ம் குறுக்குத்தெருவில் இயங்கிவரும்

சிறுவர்களுக்கான ஆடை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

வேலை நேரம்: காலை (8.30 a.m - 6.30 a.m)
காலை (9.00 a.m - 9.00 p.m)

அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (cs 23270) (2.6)

077 870 2188

## சிறுநீரகம் தேவை

60 வயதுடையவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

070 648 7783 (CS 23247) 4,6

தரமான பொருட்களை நியாயமான விலைகளில் உங்களுக்கு தருவதில் என்றும் முன்னணியில் திகழ்வது...

## உழவர் அரிசிக்கடை

மருதனார்மடம் சந்தை

மலிவு விற்பனை

உழவர்-ஆட்டக்காரி அரிசி 10 கிலோ வாங்குவோர்க்கு 1 கிலோ அரிசி இலவசம்

புதிய விலைகள்...
1 Kg உழவர் - ஆட்டக்காரி அரிசி Rs.180.00/=
10 Kg உழவர் - ஆட்டக்காரி அரிசி Rs.1800.00/=
5 Kg கீரி சம்பா Rs.1240.00/=
1 Kg ஆட்டக்காரி அரிசி தீட்டல் Rs.180.00/=
1 Kg சிவப்பு நாடு அரிசி தீட்டல் Rs.170.00/=

இன்று முதல்...
1 Litter சுத்தமான சுட்டுத் தயிர் (எருமை பால்) Rs.350.00/- (வெள்ளி,சனி, ஞாயிறு, திங்கட்கிழமை ஆகிய தினங்களில் விற்கப்படும்.)

உழவர் அரிசிக்கடை மருதனார்மடம் (சந்தை உள்பக்கத்தில்)
Open Daily:06:00-14:00

தொடர்பு: 076 287 81 57

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

"Water Proofing"

உங்கள் கட்டடச் சுவர்களில் ஏற்படும் நீர்க்கசிவு மற்றும் சுவர் பூச்சுக்களில் ஏற்படும் பாதிப்புக்களை எங்களிடம் இரசாயனப் பொருட்களைப் பெற்று நீங்களே சீர் செய்து கொள்ளலாம்.

விசேட விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

எம் நிறுவனம் மூலம் செய்பவர்களுக்கு 10 வருட உத்தரவாதம் வழங்கப்படும்




FINEX

(14435)

ஏக விநியோகஸ்தர்கள்

North & East Engineering
55, stanly Road, Jaffna, Sri Lanka.
21 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com


# மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 01 - 1934

மறைவு 14 - 01 - 2023

பேராசிரியர்

## கோபாலப்பிள்ளை மகாதேவா

மட்டுவில் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பேராசிரியர் கோபாலப்பிள்ளை மகாதேவா கடந்த 14.01.2023 லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தர் வேலாயுதர் கோபாலப்பிள்ளை மற்றும் இராமநாதர் அப்பா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா முத்துக்குமாரசாமி மற்றும் தங்கரத்னம் முத்துக்குமாரசாமி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற Dr.சீதாதேவி மகாதேவா அவர்களின் அன்புக் கணவரும், செல்வி உமா மகாதேவா, திருமதி உஷா மோரன், Dr.லவன் மகாதேவா மற்றும் Dr.உலா மகாதேவா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வி.கே. தில்லைநாயகம் மற்றும் காலஞ்சென்ற கே.விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வி அமாலியா மகாதேவா பொன்ரன் மற்றும் செல்வி கமலா மகாதேவா பொன்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி முற்பகல் 11.00 மணி தொடக்கம் மதியம் 12.45 மணிவரை, இலங்கை நேரப்படி பி.ப.4.30 மணி தொடக்கம் 6.15 மணிவரை West Chapel, Golders Green Crematorium, 62 Hoop Lane, London, NW11 7NL, UK அந்திய சேவையில் இடம்பெறும்.

நிகழ்நேர ஒளிபரப்புக்கான இணைப்பு
https://watch.obitus.com
username : gohi9569 password : 914859

தகவல்:
Dr.உலா மகாதேவா
(மகள்)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> வீட்டிலை சோறுமில்லை நாட்டிலை டொலருமில்லை
> சாட்டில்லாம சாகவும் வழியில்லை— வேட்டியே
> அவிண்டு அம்மணமா போய் அவமானத்தில
> கவிண்டாலும் ஊர்வலம் போக கோடிகளைக் கொட்டும்
> இந்துசமுத்திர முத்தான நாடெங்கள் நாடே!
>
> - புலவர் பூமர்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 தை 22 ஞாயிற்றுக்கிழமை (05.02.2023) சிகரம் : 135

# சுடலைக்கழிவு அரசியல்?

நிலாந்தன்

1970 களில் தமிழ் இளைஞர் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்டவரும், பிந்நாளில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின், இணைந்த வடக்கு - கிழக்கில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமாகிய, ஒரு மூத்த அரசியல் செயற்பாட்டாளரின் நேரடி அனுபவம் இது…

தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்ட காலப்பகுதியில் இளையவர்கள் அமிர்தலிங்கத்தின் வீட்டு முன் விறாந்தையில் தங்குவதுண்டாம். ஒரு நாள் இரவு அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்காகப் போகும்பொழுது அவர்களோடு சேர்ந்து அமிர்தலிங்கத்தின் மகன் ஒருவரும் சென்றிருக்கிறார். இரவு முழுதும் மகனைத் தேடிக் காணாத அமிர்தலிங்கம் அடுத்த நாள் காலை இந்த இளைஞர்களோடு அவரைக் கண்ட பொழுது பின்வரும் தொனிப்படப் பேசியிருக்கிறார்…

"நீயும் படிக்காமல் இவங்களப் போல காவாலியளாத் திரியப் போறாயா?"

1970 களில் அமிர்தலிங்கம் எந்த நோக்கு நிலையில் இருந்து அவ்வாறு கூறினாரோ, அதே நோக்கு நிலையில் இருந்துதான் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின் சுமந்திரனும் கதைக்கிறாரா? "20 வருடங்களாகக் கூட இருந்தவர்களை நல் வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்துவிட்டோம்" இவ்வாறு சுமந்திரன் அண்மையில் சாவகச்சேரியில் வைத்துக் கூறியுள்ளார். முன்பு பங்காளிகளாக இருந்த கட்சிகளை நோக்கித்தான் அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களை நல் வழிப்படுத்த முற்பட்டோம் என்று கூறுகிறார். ஆயின் அவர்கள் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று பொருள். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குற்றவாளிகள் அல்லது திருத்தப்படவேண்டியவர்கள் என்று அவர் கருதுகிறாரா? இரண்டு தசாப்தங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது இனித் திருந்தமாட்டார்கள் என்று கூறுகிறாரா?




> கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புருமாற்றத்தின் (trasformation)விளைவுதான். நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய (grey)ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புருமாற்றத்தை 2009 க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நல்வழிப் படுத்துவது என்பது ஏறக்குறைய அரசாங்கம் கூறுவதுபோல புனர்வாழ்வளிப்பது என்ற பொருளில்தான். ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவ்வாறு கூறத்தக்க மனோநிலை எங்கிருந்து வருகிறது? 'நாங்கள் தூய மிதவாதக் கட்சி. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள். எமது கைகளில் ரத்தம் இல்லை. கொலைப் பழி இல்லை. நாங்கள் படித்தவர்கள்; நாங்கள் எப்பொழுதும் நல்வழியில்தான் செல்கிறோம்…. " என்று நம்பும் ஒரு மிதவாதப் பாரம்பரியத்தில் இருந்தா அவ்வாறு கூறப்படுகிறது?

ஆனால் தமிழரசுக் கட்சி அப்படிக் கூறமுடியாது. ஏனெனில் இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர் உட்பட ஆயிரக்கணக்கான இளவயதினரை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தூண்டியதே தமிழ் மிதவாதிகள்தான். குறிப்பாகத் தமிழரசுக் கட்சியானது தேர்தல்களில் தோற்கும்பொழுது தீவிர தேசிய நிலைப்பாட்டை கையில் எடுக்கும். (இப்பொழுது, பேச்சுவார்த்தை மேசையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பது போல). அப்பொழுது அவர்கள் பேசும் வீரவசனங்களில் மயங்கி இளையோர் அவர்கள் பின் செல்வார்கள். அந்த இளையோரை தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் திருப்பி அவர்களைத் தண்டிக்குமாறு தூண்டியது தமிழ் மிதவாதிகள்தான். மேடைகளில் அவர்கள் செய்த முழக்கங்களை கலாநிதி சிதம்பரநாதன் "வார்த்தை வன்முறை- வேர்பல் வயலன்ஸ்" என்று வர்ணிப்பார். இவ்வாறு தமிழ் மிதவாதிகளால் தூண்டப்பட்டு போசிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் ஆயுதப் போராட்டம் ஆகும். எனவே தமிழரசுக் கட்சி இதில் தனக்குச் சம்பந்தமில்லை என்று கூறமுடியாது. தனது கையில் ரத்தம் இல்லை என்றும் கூறமுடியாது. தமிழரசுக் கட்சியின் தேர்தல் மேடைகளில் இளையோர் உணர்ச்சிவசப்பட்டு, விரலை வெட்டி, தலைவர்களின் நெற்றியில் ரத்தத் திலகம் வைத்தார்கள். அவ்வாறு ரத்தத்தால் பொட்டு வைத்த ஒருவர் பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக வந்தார். அவருக்கு இயக்கபெயரும்'பொட்டு' என்று வைக்கப்பட்டது. இப்படியாக இளைஞர்களை ரத்தம் சிந்துமாறு ஊக்குவித்த ஒரு கட்சி இப்பொழுது தன்னை ஒரு தூய மிதவாதக் கட்சியாக கூறிக்கொள்ள முடியாது. ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் இந்தியாவில் ஓர் இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அதை அமிர்தலிங்கம் தடுக்கவில்லை.

இவ்வாறு தமது இயலாமை, பொய்மை, போர்க்குணமின்மை என்பவற்றுக்கு எதிராகத் திரண்டு வந்த இளையோரின் கோபத்தைத் திசைதிருப்பி, ஆயுதப் போராட்டத்தை நோக்கி ஊக்குவித்ததன்மூலம் தமிழ்த் தலைமைகள் தந்திரமாகப் போராட்ட பொறுப்பை இளைய தலைமுறையின் தலையில் சுமத்தின. ஆயுதப் போராட்டம் படிப்படியாக அரங்கில் முன்னேறத் தொடங்கியபொழுது அதன் தர்க்கபூர்வ விளைவாக தமிழ் மிதவாதிகள் பின்னரங்குக்குத் தள்ளப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டம் மிதவாதிகளுக்கு எதிராகவும் திரும்பியது. அதாவது ஆயுதப் போராட்டத்தால் தண்டிக்கப்படுவோரின் பட்டியலில் தமிழ் மிதவாதிகளும் இருந்தார்கள் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனினும் அதே ஆயுதப் போராட்டம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பின் ஒரு பண்புருமாற்றத்துக்கு தயாராகியது அதன் விளைவுதான் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புருமாற்றத்தின் (trasformation)விளைவுதான். நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய (grey)ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புருமாற்றத்தை 2009 க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார். வரலாறு அவருக்கு நிர்ணயகரமான, உன்னதமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் வரலாறு அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றவில்லை. ஒரு பண்புருமாற்ற காலகட்டத்தை அவர் வீணடித்து விட்டார். ஒரு பண்புருமாற்றத்துக்குத் தலைமைதாங்க அவரால் முடியவில்லை. அதற்கு அவசியமான அரசியல் உள்ளடக்கமும் அவரிடமில்லை.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். ஆயுதப் போராட்டம் என்றாலே எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக்கும். இதில் எல்லாருக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் தங்களுடைய இறந்த காலத்தைக் கிண்டத் தொடங்கினால் பிணமும் நிணமும் எலும்புக்கூடுகளுந்தான் வெளியேவரும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை கிண்டுவது என்பது அதன் பெரும்பாலான அர்த்தத்தில் புதைமேடுகளைக் கிண்டுவதுதான். அப்படிக் கிண்டத் தொடங்கினால், ஒருவர் மற்றவரைக் குற்றவாளியாக்குவதிலேயே தேசம் பல துண்டுகளாகச் சிதறிப் போய்விடும்.

ஓர் ஆயுத மோதலுக்கு பின்னரான அரசியல் என்ற அடிப்படையில், தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீதிக்கான போராட்டம். இரண்டு, அந்தப் போராட்டத்துக்காக தேசத் திரட்சியை ஆகக்கூடியபட்சம் உடையவிடாமல் பாதுகாப்பது. அவ்வாறு தேசத்திரட்சியை பலமான நிலையில் பேணுவதென்றால், அதற்கு தமிழ் அரசியலில் பண்புருமாற்றம் அவசியம். அதாவது வெளி நோக்கிய நீதிக்கான போராட்டம்; உள்நோக்கிய பண்புருமாற்றம். அதற்கு பரந்த மனம் கொண்ட பெருந்தலைவர்கள் வரவேண்டும்.

ஆனால் சம்பந்தர் அவ்வாறான ஒரு பெருந் தலைவரல்லர். தமிழ் அரசியலில் முன்னெப்பொழுதும் தோன்றியிராத ஒரு சாம்பல் பண்புமிக்க கூட்டுக்கு சுமார் 20 வருடங்கள் அவர் தலைமை தாங்கினார். தமிழ் மிதவாத அரசியலிலேயே அதிகளவு ஆசனங்களை(22) வென்ற அந்தக்கூட்டு படிப்படியாகச் சிதைந்து போய்விட்டது. அதற்கு அவரும் பொறுப்பு. அவர் தலைமை தாங்கிய ஒரு கூட்டுக் கலைந்தபொழுது, அதன் தலைவராக, அதைக்குறித்து அவர் உத்தியோகபூர்வமாக எதையும் சொல்லவில்லை. அல்லது சொல்ல முடியவில்லை. கூட்டமைப்பின் சிதைவு என்பது சம்பந்தருடைய தலைமைத்துவத்தின் தோல்வியுந்தான். தமிழ்ப் பண்புருமாற்ற அரசியலின் தோல்வியுந்தான். அது தமிழரசுக் கட்சியின் தோல்வியுமா என்பதை இனிவருங்காலமே தீர்மானிக்கும்.

கடந்த சில கிழமைகளுக்குள் கூட்டமைப்பு மட்டும் சிதையவில்லை, தமிழரசு கட்சியும் இறுக்கமான ஒரு கட்சியாக உள்ளதா என்று கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த கிழமை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்போது மார்ட்டின் வீதியில், கட்சித் தலைமையகத்தில் மூத்த த்லைவர்கள் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

ஆனால் வேட்பு மனுக்கள் சுமந்திரனின் அணியால் பிறிதொரு இடத்தில் தயாரிக்கப்பட்டு நேரடியாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. அதாவது கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் தமிழரசுக்கட்சி இல்லை என்று பொருள். அது மட்டுமல்ல, கிளிநொச்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது, சுமந்திரனுக்கு விசுவாசமான அணியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியில் இணைந்துவிட்டார்கள். சிறீதரனின் அன்ரன் பாலசிங்கம்' கட்சியை எங்கே கொண்டு போகிறார்?

கடந்த திங்கட்கிழமை கரைச்சி பிரதேசசபையின் தவிசாளரின் வீட்டுக்கு முன் சுடலைக் கழிவுகள் ஒரு மூடையாகக் கட்டிப் போடப்பட்டுள்ளன என்பதனை அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதை யார் செய்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. எனினும் முகநூலில் பிரதேசசபைத் தவிசாளர் எழுதிய குறிப்பில், சுயேச்சைக் குழுவின் மீதே குற்றஞ்சாட்டப்படுகிறது. ஒரே கட்சிக்குள் ஒரே தேர்தல் தொகுதிக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுடலைக் கழிவுகளை வீட்டின் முன் போடும் அருவருப்பான ஒரு வளர்ச்சிக்கு வந்துவிட்டனவா? இருபது வருடங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது முன்னாள் பங்காளிகளை ஒட்டுக்குழுக்கள், தூள் கடத்திகள், தலையாட்டிகள் என்று அழைக்கலாமென்றால், நாளை கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு என்னென்ன பட்டங்களைச் சூட்டப் போகிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலும் இலங்கைத் தமிழர் உரிமைகளும்:





பேராசிரியர் சி.பத்மநாதன்

## தந்தை சா.ஜே.வே.செல்வநாயகத்தின் சாதனைகள்

எதிர்வரும் மார்ச் மாதம் தந்தை சா.ஜே. வே.செல்வநாயகத்தின் 125 ஆவது பிறந்த ஆண்டு நினைவு கூரப்படுவதை முன்னிட்டு பேராசிரியர் சி. பத்மநாதன்எழுதிய இக்கட்டுரைத் தொடரானது, தமிழ் அரசியற் பரப்பிற் தடம் பதித்து ஆழக் காலூன்றியவர்களும் வழிதவறிப்போனவர்களும் மறந்து போனவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது. இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுநோக்கி பேச்சுக்கான கதவுகள் மீளவும் திறக்கப்பட்டுள்ள நிலையில், 70 ஆண்டுகளுக்கு மேலாக நீண்டு செல்லும் இனப்பிரச்சினை தொடர்பில் பல விடயங்களை இன்றைய தலைமுறைக்கு நினைவூட்டி வழிப்படுத்த முற்படுகிறது.

தமிழர்களது எதிர்கால நலன் குறித்துச் சிந்திப்பவர்களும் செயற்படுபவர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் அரசியலில் பத்தி எழுத்தாளர்களும் அறிந்திருக்க வேண்டியவற்றை இத்தொடரிலே செல்வநாயகத்தின் சாதனைகளூடாகப் பகிர்ந்து கொள்கின்றார் பேராசிரியர் சி.பத்மநாதன்.

### இராமநாதனும் அருணாசலமும் புரிந்துகொள்ளாத விடயங்கள்

கொழும்பில் வாழும் தமிழருக்கான பிரதிநிதித்துவம் தொடர்பாக அருணாசலத்திற்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருந்தது. அதனை அருணாசலம் - சமரவிக்கிரம உடன்படிக்கை என்று சொல்வது வழக்கமாகி விட்டது. அதனை நிறைவேற்றுவதற்குச் சிங்களத் தலைவர்கள் மறுத்துவிட்டதால் அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்னும் அமைப்பிலிருந்து வெளியேறினார். இதுவே இலங்கையில் தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையில், நவீன காலத்தில் ஏற்பட்ட முதலாவது முரண்பாடென்று வரலாற்றாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இதன் காரணமாக சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் ஏற்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழரின் நலவுரிமைகளுக்கும் கொழும்புத் தமிழர் பிரதிநிதித்துவத்துக்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அது கொழும்பில் வாழும் தமிழரை மையமாகக் கொண்டும் கொழும்பினை அதிகாரமையமாக ஒப்புக்கொண்டும் ஏற்படுத்திய பிரச்சினை. அது அருணாசலத்தின் பிரச்சினை.

1915- 1916 ஆகிய காலத்தில் ஏற்பட்ட சிங்கள- முஸ்லிம் கலவரங்களை அடக்குவதற்குப் பிரித்தானிய அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களிலும் கட்டுப்படுத்த முடியாத அளவிலே கிளர்ச்சி பரந்துவிட்டது. ஓராயிரம் வரையான உயிர்கள் பலியாகியதோடு மதிக்கமுடியாத அளவிலான சொத்துடைமைகளும் அழிந்துவிட்டன. கிளர்ச்சியினை அடக்குவதற்கு பஞ்சாப்பிலிருந்தும் பிரித்தானிய-இந்தியப் படைகளைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது உலகப்போரின் இறுதியான காலகட்டம். அதனாற் பீதியடைந்திருந்த தேசாதிபதியின் கட்டளைப் பிரகாரம் சிங்களத் தலைவர்கள் பலரும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அரசாங்கத்தின் செயற்பாடுகளை மிகுந்த துணிவோடும் ஆற்றலோடும் இராமநாதன் கண்டித்தார். இனக்கலவரம் பற்றி அவர் எழுதிய Riots and Martial Law in Ceylon என்னும் நூலில் அரசாங்கத்தினாலே கொடுமைப்படுத்தப்பட்ட சிங்கள தேசம் பற்றிக் குறிப்பிடுகின்றார். இலங்கை முழுவதையும் அவர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கமுடியாது.

இலங்கைத் தமிழர் இலங்கையிலுள்ள மற்றொரு தேசிய இனம் என்பது அவர் சிங்கள தேசம் பற்றிச் சொன்னவற்றிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது. உண்மையான நிலையும் அது தான். ஆனாலும், அரசமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய பேச்சுகள் வருகின்ற பொழுது இராமநாதன் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதைப் பற்றியும் அதிகாரப் பகிர்வு என்பதைப் பற்றியும் எதனையும் கூறவில்லை.

மொழி, பண்பாடு, தனித்துவமான வரலாறு கொண்ட, இலங்கையிலுள்ள தேசிய இனங்கள் பற்றியும் அவற்றுக்கு வடிவங்கொடுக்கும் வகையிலான அதிகாரப் பரவலாக்கம் பற்றியும் முதன்முதலாக கருத்துக்களை வெளிப்படுத்தியவர் S.W.R.D. பண்டாரநாயக்க தான். அவர் இளமைக்காலத்தில் முற்போக்கான சிந்தனையாளராக விளங்கினார். பழங்கால வழமைகளையும் நிகழ்காலத் தேவைகளையும் புரிந்து கொள்ளக்கூடிய மதிநுட்பமான சிந்தனைகள் அவரிடம் மட்டுமே காணப்பட்டன. அவர் 1926 ஆவது ஆண்டில், யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்து (YMCA) மாநாட்டில் சிறப்புரை நிகழ்த்திய பொழுது இலங்கையில் 1000 வருடங்களுக்கு மேலாக கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகிய சமூகத்தினர் தங்களுக்குரிய மொழி மரபுகளையும் தனித்தனியான சமய, பண்பாட்டு மரபுகளையும் வழமைகளையும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். அத்தகைய சமுதாயங்களுக்கு அளவுக்கு மேலாக மத்தியமயமாக்கப்பட்ட ஆட்சிமுறை பொருத்தமற்றது என்றும் ஒரு கூட்டாட்சி முறையே தேவைப்படுவது என்றும் சொன்னார். அது தமிழர்களைப் பொறுத்தளவிலே செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகிவிட்டது. மேதாவிலாசமான சிந்தனைகளை அவர்களாற் புரிந்துகொள்ள முடியவில்லை.



தந்தை செல்வாவைப் பேட்டி காணும் இதயம் பேசுகிறது மணியன்

கட்டிலில் அமர்ந்துள்ள ஈ.வெ.ரா.பெரியாருடன் எதிரே அமர்ந்து உரையாடும் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோர் உடன் திராவிடர் கழகத் தலைவர் சி.வீரமணி, இரா.ஜனார்த்தனம் ஆகியோர்.



### டொனமூர் ஆணைக்குழுவினருடன் சமஷ்டிக் கோரிக்கை

முற்போக்கான சிந்தனைகளுடன் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் நோக்குடன் டொனமூர் ஆணைக்குழுவினர் கி.பி. (1928-1929) இலங்கைக்கு வந்தனர். இலங்கை சமூகத்தவரிடையே அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றி மாறுபாடான கருத்துக்கள் காணப்பட்டன. தமிழர் தரப்பிலுள்ளவர்கள் பொருத்தமான, சாத்தியமான கருத்துக்களை முன்வைக்கத் தவறிவிட்டனர்.

இராமநாதனும் வேறு பலரும் சர்வஜன வாக்குரிமை வழங்குவதை ஒப்புக்கொள்ளவில்லை. அது படிப்படியாக வழங்கப்படவேண்டும் என்பது அவர்களின் கருத்தாகும்; மேலும், தமிழரின் பிரதிநிதித்துவம் விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைந்துவிடும் என்பது அவரின் சிந்தனையாகும். கண்டிச் சிங்களவர்களின் பிரதிநிதிகள் ஒரு சமஷ்டி முறையிலான அரசியலமைப்பின் தேவையை வலியுறுத்தினார்கள். கரையோரச் சிங்களவர், கண்டி நாட்டுச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகிய மூவகை இனத்தவர் வாழும் பிராந்தியங்களைத் தனித்தனியான அலகுகளாகக் கொண்ட கூட்டாட்சி முறையே அவர்களின் கோரிக்கையாகும். இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை சிங்களத் தலைவர்களிற் பலர் நன்கு உணர்ந்திருந்தனர். பிரித்தானிய அரசாங்க அதிகாரிகள் எழுதிய ஆவணங்களிலும் அவர்களைப் பெரும்பான்மை இனங்களில் ஒன்றெனக் குறிப்பிட்டனர். கண்டிச் சிங்களத் தலைவர்களின் கோரிக்கைகளைத் தமிழர் ஆதரித்திருந்தால் அவற்றை இலகுவில் நிராகரிக்க முடியாத நிலை டொனமூர் குழுவினருக்கு ஏற்பட்டிருக்கும். நல்லதொரு வாய்ப்பினை அன்றைய தமிழ்த் தலைவர்கள் உதாசீனம் செய்துவிட்டனர். அந்தப் பொறுப்பும் இராமநாதனுக்கும் ஹன்டி பேரின்பநாயகத்துக்கும் உரியது.

இலங்கையின் பிரதானமான அரசியற் பிரச்சினை தொடர்பாக யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸாரின் சிந்தனையும் செயற்பாடும் கோமாளிக் கூத்தாகிவிட்டன. சிறுபான்மையினரின் காப்பீடுகள் பற்றி எதனையும் பேசத்தேவையில்லை என்பது அவர்களின் மனப்பாங்கு. இலங்கை முழுமையான சுதந்திரம் பெறவேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோள். ஆனால் இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக உறுதியான முடிவுகளை எடுப்பதற்கு முன் இலங்கைக்குப் பிரித்தானியர் முழுமையான சுதந்திரம் வழங்குவது சாத்தியமற்றது.

டொனமூர் சீர்திருத்தங்களில் முன்னேற்றமான, சிறப்பான பல அம்சங்கள் இருந்தன. அதன் மூலம் பெருந்தோட்டங்களிலே தொழிலாளராகச் சேவை புரிந்த தமிழர் குடியுரிமைகளைப் பெறமுடிந்தது. மக்களாலே தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் சட்டவாக்கம், சட்டநிறைவேற்றம், நிர்வாகம் ஆகியவற்றில் அமைச்சுக் குழுக்கள் மூலம் பங்குகொள்ளமுடிந்தது. அவற்றில் எல்லாச் சமூகத்தவர்களும் பங்கு கொண்டதால் சிறுபான்மையினருக்கு எதிரான முனைப்புகள் இடம் பெறவில்லை. அரசசபை 1944 இல் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாகும் என்ற சட்டத்தை நிறைவேற்றியது. தொழில் வழங்குதல், பதவி நியமனங்கள் என்பனவற்றிலும் இனவாதமான, பக்கச்சார்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பின்னோக்கிப் பார்க்குமிடத்து அரச சபைக்குரிய முதலாவது தேர்தலைப் பகிஷ்கரித்தமையும் சமுதாயத்திற்கு வேண்டிய நியாயமான கோரிக்கைகளை முன்வைக்காதமையும் அரசியற் சாதுரியமின்மை, அனுபவமின்மை, இயலாமை என்பவற்றின் வெளிப்பாடுகளாகவே கருதப்படும். டொனமூர் சீர்திருத்தங்களின் பிரதானமான அம்சங்களில் ஒன்றான குழுமுறையான அமைச்சு முறை இனப்பிரச்சினையின் தீர்வுகளுக்கான யோசனைகளிலே பரிசீலிக்க வேண்டியதாகும். மத்தியிலும் குறிப்பாகப் பிராந்திய சபைகளிலும் இன முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் கூட்டுமுறையிலான, சுமுகமான நிர்வாகத்தை நடத்துவதற்கும் அது நல்ல பரிகாரமாக அமையும். இன நல்லிணக்கத்துக்கு அது அவசியமானது.

### சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கையின் பலவீனமும் அதன் நிராகரிப்பும்

சென்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கையின் அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படும் சமயங்களில், சுதந்திரம் கிடைக்கும் காலம் வரை, மேலதிகமான இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் தொடர்பான கோரிக்கைகளையே தமிழ்த் தலைவர்கள் முன்வைத்தனர். காப்பீடுகள் தொடர்பாக வேறு வழியான சிந்தனைகள் பற்றிய எண்ணங்கள் அவர்களிடையிற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண்கள் விற்பனைக்கு!!!

வவுனியாவிலிருந்து
ராம்

இலங்கைக்கு அதிக அந்நிய வருமானத்தை ஈட்டித்தருபவர்களில், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக அழைத்துச் செல்லப்படுபவர்கள் முதன்மையானவர்கள். சவுதி அரேபியா, டுபாய், கத்தார், பஹ்ரேன், ஓமான் எனப் பல நாடுகளுக்கு இலங்கைப் பெண்கள் வீட்டு வேலைகளுக்காகச் செல்கின்றனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து தமிழ், முஸ்லிம் பெண்கள் அதிகளவில் இந்தப் பணிகளுக்காக அழைத்துச்செல்லப்படுகின்றனர். இறுக்கமான இஸ்லாமிய மத விழுமியங்கள், வீட்டு வன்முறைகள், வேலைப்பளு, சம்பளச் சீரின்மை, உழைப்புச் சுரண்டல், ஓய்வின்மை எனப் பல்வேறு துயரங்களை அனுபவித்தே சிறுதொகை வருமானத்தை இலங்கைப் பெண்கள் பெறுகின்றனர். கண்ணீரும், செந்நீருமாகக் கலந்து பெறப்பட்ட அத்தகைய ஊதியத்திலிருந்துதான் இலங்கை தன் வயிற்றையும் நிரப்பிக்கொள்கிறது.

இவ்வாறு இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அழைத்துச்செல்லப்படும் பெண்கள் குறித்த அவலப் பதிவுகள் அண்மை நாட்களாக ஊடகங்களெங்கும் வியாபித்துவருகின்றன. ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இலங்கைப் பெண்கள் பாலியல் அடிமைகளாக விற்கப்படுகின்றனர் என்ற செய்தியின் பின்னர்தான் இந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

மேற்கண்டவாறு ஓமான் நாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக அழைத்துச் செல்லப்பட்ட சர்மினி (27 வயது - பெயர் மாற்றப்பட்டுள்ளது) வவுனியாவின் சுந்தரபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர். தற்போது ஓமான் நாட்டிலிருந்து அழைத்துவரப்பட்டவர்களில் ஒருவராகத் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் சர்மினி, குடும்ப வறுமை காரணமாகவே இவ்வாறானதொரு அபாயகரமான தொழிற்பயணத்தை ஆரம்பித்ததாகக் குறிப்பிடுகின்றார். மத்திய கிழக்கிற்கு சென்று உழைத்துப் பொருளீட்டித் தன் கணவருடனும், இரு குழந்தைகளுடனும் சுபீட்சமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு, இந்த வருடத்தின் தொடக்கப் பகுதியிலிருந்து முகவராலயங்களைத் தொடர்புகொண்டதாகக் கூறுகின்றார். ஆனால் அந்தப் பயண முடிவில் எஞ்சியது ஊருக்குள் தலை காட்டமுடியாத அவமானம், வறுமை என்பவற்றோடு கணவனையும் பிரிந்த நிலை மட்டும்தான் என்கிறார்.

> அங்க இருந்த காலத்தில ஒரு நாளைக்கு ஒரு நேரம்தான் சாப்பாடு. ஒழுங்கா குடிக்க தண்ணி கூட தரமாட்டாங்கள். சவுக்காரம், உடுப்பு எதுவும் தரேல்ல. என்ன கேட்டாலும் மிருகம் மாதிரி அடிப்பாங்கள். வார்த்தையில சொல்ல முடியாதளவுக்கு சித்திரவதைப்படுத்துவாங்கள். கரப்பான் பூச்சிகள போத்தல்களில் அடைச்சிவந்து எங்களுக்கு மேல கொட்டி விடுவாங்கள்.

"பிரதேச செயலகத்தில் பதிவு செய்துதான் நாங்க மத்திய கிழக்கு நாடுகளுக்கு போகலாம். ஆனா முஸ்லிம் ஏஜென்சிக்காரன் சொன்னான், அப்பிடியெல்லாம் மினக்கெட்டால் இப்போதைக்கு டுபாய்க்குப் போக முடியாதெண்டும், தான் சொல்றபடி ரூரிஸ்ற் விசாவில போனால், அங்க போன பிறகு அதை மாத்திக்கொண்டு நாலைஞ்சு, வருசம் வேலை செய்யலாம் எண்டும் வாக்குறுதி தந்தான். வேற ஆக்களும் அப்பிடி தனக்கு ஊடாகப் போனதாகச் சொன்னான்.

நானும் என்ர ரெண்டு பிள்ளைகளையும் மனுசனோட விட்டுப்போட்டு, வேற சில பொம்பிளப் பிள்ளயளோட போனன். எங்கள டுபாய்க்குக் கூட்டிப்போறன் எண்டவன், அபுதாபியில் கொண்டு போய்விட்டிப்போட்டு ஆள் மாறிட்டான். அங்கயும் ஒரு முஸ்லிம் ஏஜென்சிக்காரன் எங்கள பொறுப்பெடுத்துக் கூட்டிப்போனான். அவன் தன்ர ஒவ்வீஸ்ல சில காலம் தங்கியிருக்க வேணுமெண்டும், ஆக்கள் ஓடர் பண்ணி கேட்கும்போது ஒவ்வொருத்தரா அனுப்புவன் எண்டும் சொன்னான்.

ஒரு கிழமை நல்லா இருந்தது. சாப்பாடுகள், வசதிகள் எல்லாம் இருந்தது. பிறகு நிலமை மாறினது. எங்கட போன், பாஸ்போர்ட் எல்லாத்தையும் பறிச்சிவச்சிட்டான். அவன் வேற ஆம்பிளயளயும் கூட்டிவந்து எங்கள விதம் விதமாக துன்புறுத்தத் தொடங்கினான். ஆக்கள பிரிச்சிப் பிரிச்சி தனித்தனி அறைகளில அடைச்சாங்கள். எங்கள ஓமான்காரங்களுக்கு விற்கப் போறதாக சொன்னான்.

யாழ்ப்பாணப் பிள்ளையள், தமிழ்ப் பிள்ளையள தனி ரூமுகளில அடைச்சாங்கள். கேரளாக்காரன், ஓமான் காரன் யாழ்ப்பாணப் பிள்ளைகள கூட விலை குடுத்து வாங்குவாங்கள் எண்டுதான் அப்பிடிச் செய்தாங்கள். அங்க இருந்த காலத்தில ஒரு நாளைக்கு ஒரு நேரம்தான் சாப்பாடு. ஒழுங்கா குடிக்க தண்ணி கூட தரமாட்டாங்கள். சவுக்காரம், உடுப்பு எதுவும் தரேல்ல. என்ன கேட்டாலும் மிருகம் மாதிரி அடிப்பாங்கள். வார்த்தையில சொல்ல முடியாத ளவுக்கு சித்திரவதைப்படுத்துவாங்கள். கரப்பான் பூச்சிகள போத்தல்களில் அடைச்சிவந்து எங்களுக்கு மேல கொட்டிவிடுவாங்கள்.

இந்த சித்திரவதைகள நாங்கள் எங்கட உறவுகளுக்கோ, இலங்கை எம்பஸிக்கோ சொல்லக்கூட வழியிருக்கேல்ல. இதுக்குள்ள எங்களோட இருந்த நிறையப் பேர வித்திட்டாங்கள். இந்தக் கொடுமைகளுக்குள்ளால தப்பின சிலபேர் எம்பஸிக்கு சொல்லி, மீடியாக்களுக்கு சொல்லி கொஞ்சப்பேர் இப்ப நாடுதிரும்பியிருக்கிறம்.

அதிலயும் இப்ப நாட்டுக்கு வந்தபிறகு பெரிய பிரச்சினை எங்களுக்கு. நான் வீட்ட வந்த பிறகு வவுனியாவில ஒரு போராட்டம் நடந்தது. அதுக்கு நானும் போனன். அந்த போராட்டத்தில எங்களுக்கு ஓமான்ல நடந்தத சொல்லி, மிச்ச பிள்ளையளயும் வேகமாக கூட்டிவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு பாதிப்பட்ட நாங்கள் சொன்னம். அந்தப் போராட்ட இடத்தில, ஓமான்ல இருந்து திருப்பி வந்த பிள்ளையள் எல்லாரும் தங்களுக்கு நடந்த கொடுமைகள எங்களுக்குள்ள கதைச்சிக்கொண்டம்.

## பதறவைக்கும் உண்மைச் சம்பவம்



நானும் எனக்கு நடந்த கொடுமைகள சொல்லிக் கொண்டிருந்தன். (அதை நான் உங்களுக்கு கூட சொல்லயில்ல) அதை யாரோ எனக்கு தெரியாமலே வீடியோ எடுத்து நெற்றில விட்டிற்றினம். அதை எப்பிடியோ என்ர கணவர் பார்த்திட்டார். அண்டைக்கு வீட்ட வந்து சண்டை பிடிச்சிப்போட்டு, போன் எல்லாம் உடைச்செறிஞ்சு போட்டு போனவர் இன்னும் வீட்ட வரயில்ல. இப்ப நானும் ரெண்டு பிள்ளயளும்தான் தனிச்சிருக்கிறம்"

சர்மினியின் கதை ஓமானிலிருந்து திரும்பிய ஒரு பெண்ணுடையது மட்டும்தான். இன்னமும் பல நூறு தமிழ் பெண்கள் மீட்கப்படாமலேயே ஓமானில் கைவிப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



. சி.அபிந்திகா,
தரம்- 1A
மானிப்பாய் மகளிர்
கல்லூரி



A.ஜெகானா செனூரி,
தரம்- 2
யா/ உடுவில் மகளிர்
கல்லூரி.

சி.ஸ்ரீராம்
ɪதரம் 7
யா/புனித பரியோவான்
கல்லூரி





. சி.அபிந்திகா,
தரம்- 1A
மானிப்பாய் மகளிர்
கல்லூரி



பி.ஹேசாஜினி
தரம் - 2C
யா/ சுண்டிக்குளி மகளிர்
கல்லூரி


## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




## பாலைவன நாடு!

உலகின் பத்தாவது பெரிய நாடாகவும் ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடாகவும் இருப்பது அல்ஜீரியா.
கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கே மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் அரேபியர்கள் இங்கே குடியேறியுள்ளனர். அல்ஜஸாரி என்ற அரேபியச் சொல்லிலிருந்து இந்தப் பெயர் வந்தது.
1830ஆம் ஆண்டிலிருந்து காலனி ஆதிக்கத்திலிருந்து. 1962ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது.
கி.பி 1170 - 1250 காலகட்டத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற இத்தாலியக் கணிதவியலாளரான, ஃபிபொனாச்சி (Fibonacci), இளமைப் பருவத்தில் இங்குதான் தங்கியுள்ளார்.
இந்துஅராபிய எண் முறையையும் இங்குதான் கற்றுள்ளார்.
உலகின் புகழ்பெற்ற சகாரா பாலைவனத்தின் வடகிழக்கு எல்லை அல்ஜீரியாவில்தான் அமைந்துள்ளது.
நடுப் பாலைவனப் பகுதி என்பதால், ஆண்டு முழுவதும் வெப்பம் மிகுந்திருக்கும். இரவிலோ கடுமையான குளிர் இருக்கும்.

## ஆங்கிலம் கற்போம்

| | |
|---|---|
| Let's go | போவோம் |
| No thanks | நன்றி வேண்டாம் |
| Anyway | எப்படியும் |
| Sorry | மன்னிக்கவும் |
| Strict | கண்டிப்பான |
| Good idea | நல்ல யோசனை |
| Come in | உள்ளே வா |
| Take it | அதை எடு |
| Put it | அதை போடுங்கள் |
| Ask him | அவரிடம் கேளுங்கள் |
| Read it | அதை வாசி |
| Just one | ஒன்றே ஒன்று |
| Give me | என்னிடம் கொடு |
| Like us | எங்களை போல |
| Keep it | அதை வையுங்கள் |
| Do well | நன்றாக செய் |
| Hurry up | சீக்கிரம் |
| Definitely | நிச்சயமாக |

## எனது பொம்மை



சின்னச் சின்ன பொம்மை
சிறிய நல்ல பொம்மை
கண்மூடிக் கண் திறக்கும்
கவர்ச்சியான பொம்மை
அப்பா வாங்கித் தந்த
அழமு மிகுந்த பொம்மை
தூங்கும் போது என்னுடன்
துணைக்குப் படுக்கும் பொம்மை
தாலாட்டுப் பாடினால்
தலையாட்டும் பொம்மை

**சி.அபிந்திகா,**
தரம்- 1
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# இலங்கை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படவில்லை. நிகரிலாத நாவன்மையாளராகவும் அதி உன்னதமான வழக்குரைஞராகவும் விளங்கிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் வகுத்த சமபல பிரதிநிதித்துவக் கோட்பாடு முன்னைய காலத்துக் கோரிக்கைகளின் உச்சகட்டமான வடிவமாகும். 70 வீதமான சிங்களவருக்கு நாடாளுமன்றத்தில் 50 வீதமான ஆசனங்களையும் எஞ்சியவற்றை 30 வீதமான ஒட்டுமொத்தமான சிறுபான்மையினருக்கும் பகிர்ந்து கொள்வதே அந்தக் கோரிக்கையின் சாராம்சமாகும். அது நிறைவேற்ற முடியாதவொன்று. பிரதிநிதித்துவம் குடித்தொகைப் பரம்பல் அடிப்படையில் வழங்கப்படுவது தொடர்பான டொனமூர் சீர்திருத்தத்தின் ஏற்பாடுகள் அந்த வகையிலானவை முன்னைய ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்ட இனவாரியான பிரதிநிதித்துவ முறையினைச் சோல்பரி ஆணைக்குழு பரிசீலனை செய்வது அசாத்தியமான ஒன்றாகும்.

சமபல பிரதிநிதித்துவ முறை என்பதை பெரும்பான்மையினரான சிங்களவர் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அடிப்படையில் அந்தக் கோரிக்கை மனித உரிமைகளுக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் விரோதமானதாகும். அது முன்வைக்கப்பட்டமையே ஒரு விநோதமாகும்.

இந்தக் கோரிக்கை பெரும்பாலான முஸ்லிம்களினதும் இந்திய வம்சாவழித் தமிழர்களினதும் ஆதரவோடு முன்வைக்கப்பட்டது. அதை ஆணைக்குழு சுலபமாக நிராகரித்துவிட்டது.

உண்மையில் அரச சபையின் அமைச்சர் அவை தயாரித்த திட்டமே சோல்பரித் திட்டம் என்று சொல்லப்படுவது. அதனை டி.எஸ்.சேனாநாயக்கவும் சகபாடிகளும் மிகச் சாதுரியமாகப் பெற்றுக் கொண்டனர்.


அவர்கள் கிளர்ச்சி புரியாதும் விசுவாசமாகவும் இருந்தமையால் பிரித்தானியர் அவர்கள் தயாரித்து வழங்கிய வரைவினை மாற்றமின்றி ஒப்புக்கொண்டனர். அதில் ஒற்றையாட்சி என்ற வரையறை எதுவுங் காணப்படவில்லை.

கண்டிச் சிங்களவர் மீண்டுமொரு முறை சமஷ்டி அரசியலமைப்புக்கான கோரிக்கையை முன்வைத்தனர். தமிழ்த் தலைவர்கள் அதனை எட்டியும் பார்க்கவில்லை.

உரியவற்றையும் சாத்தியமானவற்றையும் சிங்களத் தலைவர்களோடு இணைந்து பெறக்கூடியவற்றையும் கேட்காதமையால் இலங்கைத் தமிழர் தமது இருப்பினைப் பாதுகாப்பதற்கு அக்கினிப் பிரவேசமான பாதையைத் தெரிவு செய்ய வேண்டியதாயிற்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Civil Hospital Jaffna in 1948
CEYLON ADMINISTRATION REPORTS 1948 [IV - Education



சாமுவேல் பிஸ்க் கிறீனினது கல்லறை
Image source - www.findagrave.com



எழுத்துக்களின் தெளிவுக்காக செம்மைப்படுத்தப்பட்ட பிரதி


CEYLON
PART IV. EDUCATION, SCIENCE, AND ART. (C)
Administration Report of the Director of Medical and Sanitary Services for 1948
(Dr. W. G. WICKREMESINGHE, O.B.E.)
NOVEMBER, 1949

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 19
## சில குறிப்புக்கள்

# 1864

பா. துவாரகன்

மானிப்பாயிலிருந்து 1864 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி மருத்துவர் கிறீன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தமக்கு முதலாவது மகவு பிறந்த மகிழ்ச்சியான செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். யூலியா என்ற தனது மூத்த சகோதரியின் பெயரையே அந்தப் பெண் குழந்தைக்கு கிறீன் சூட்டினார்.

பின்னாளில் யூலியா, தான் பிறந்த யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து 1906-1910 வரையான காலப்பகுதியில் அமெரிக்க -இலங்கை மிஷனுக்காக 5 வருடகாலம் சேவையாற்றினார்.

கீழைத்தேசத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னொருபோது யாழிசையில் வல்ல யாழ்ப்பாணனுக்கு வழங்கப்பட்ட மணற்றி என்னும் நிலத்திலே, ஆங்கிலேயர்களால் ஒரு நிர்வாகக் குடையின் கீழ் கொண்டுவரப்பட்ட சிலோன் என்னும் இலங்கைத் தீவில் சொல்லு தமிழையும் சுருதியையும் தமிழ்கூறும் நல்லுலகில் விளங்க வைத்த நல்லை நகர் நாவலர் பெருமான் பிறந்த யாழ்ப்பாணத்தில், 19 ஆம் நூற்றாண்டில், ஏறத்தாழ 160 வருடங்களுக்கு முன்னர் ஆங்கில மருத்துவத்தைத் தமிழன்னையின் புதல்வர்கள் தமிழில் கற்பதற்குக் காரணமாக இருந்தவர் ஒருவர். தமிழை ஆங்கில மருத்துவத்துறையின் இருக்கையிலே சீராட்டி வளர்த்த தமிழ்த்தாயின் தவப்புதல்வனான சாமுவேல் பிஸ்க் கிறீன் என்னும் அமெரிக்க மிஷனரி மருத்துவரே அந்த மேன்மைக்குரியவர்.

பூவுலகில், தமிழுக்கு என்று ஒரு வீடும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இருந்திருந்தால் மருத்துவர் கிறீனை மேன்மை பொருந்திய தமிழின் தவப்புதல்வர்களுள் ஒருவராகக் கொண்டாடியிருப்பர். கிறீனது மறைவின் பின்னராவது அவருக்குரிய மாட்சிமையை வழங்கித் தமிழ்த்தாயின் தவப்புதல்வனை அரியணையில் வைத்திருப்பர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சங்கப்புலவன் கணியன் பூங்குன்றனாரது பாடலுக்கு இலக்கணமாக யாழ்ப்பாணத்திலே 26 வருடங்கள் வாழ்ந்து, ஆதுலர்க்குச் சாலை அமைத்து உயிர்காத்த உத்தமருக்கு, அமெரிக்காவிலே மசாசுசெட்சிலே உறங்கும் தமிழர்களின் மருத்துவ ஊழியனுக்கு மணற்றியிலே ஒரு சிலையாவது வைத்திருப்பர்.

தனது மறைவின்போது தனக்கு ஒரு கல்லறை அமைப்பதாக இருந்தால் அது எளிமையானதாக இருக்க வேண்டும் என்றும் அதிலே தமிழர்களின் மருத்துவ ஊழியர் என்ற ஒரு வாசகம் மாத்திரம் இடம்பெறல் வேண்டும் என்றும் கிறீன் கேட்டிருந்தார். கிறீன் தமிழர்களின் கிறித்துவ ஊழியர் என்று தன்னுடைய கல்லறையின் நினைவுக் கல்லிலே செதுக்கச் சொல்லி தனது உயிலிலே எழுதவில்லை என்பது நம் சிந்தனைக்குரியது.

### தமிழ்மொழி வரலாற்றில் தடம்பதித்த 1864

1864ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே வெளிவந்த உதயதாரகை பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. அதிலே அடுத்து ஆரம்பமாக உள்ள மருத்துவக் கற்கை நெறி தமிழ்மொழி மூலம் இடம்பெறும் என்றிருந்தது. உதயதாரகை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு மருத்துவம் பயில 30 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 11 பேர் மருத்துவம் பயில்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டனர். 1864 ஆம் ஆண்டு மே மாதம் தமிழ் மொழி மூலம் ஆங்கில மருத்துவம் பயிலும் வகுப்பு மானிப்பாயில் ஆரம்பமாகியது.


கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்ற 6 ஆவது மருத்துவ மாணவர் அணியினரே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த முதலாவது தமிழ்மொழி மூலமான மருத்துவ மாணவர்கள்.

### உலகில் தமிழ்மொழி மூலம் முதன்முதலாக மேலைத்தேச மருத்துவம் பயின்றவர்கள்: (1864 - 1867)

1. கே. இளையபிள்ளை
2. கந்தப்பர்
3. எஸ். சிற்றம்பலம்
4. ஏ. சிவசிதம்பரம்
5. வி. சிற்றம்பலம்
6. எஸ்.சின்னப்பு
7. சாமுவேல் டேவிட்
8. சாமுவேல் எச். முருகேசு
9. டானியல் வெற்றிவேலு,
10. ஆர். எஸ். வேலுப்பிள்ளை
11. எஸ். மண்டலம்




இப்பதினொருவரில் இருவர் விசேட கொடுப்பனவைப் பெற்றனர். ஒருவர் வகுப்பின் மாணவ தலைவராகவும் நூலகராகவும் கடமையாற்றியமைக்காவும் மற்றவர் மருத்துவக் கல்லூரி வளாகத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டதற்காகவும் சிறுதொகையை ஊதியமாகப் பெற்றனர். அனைவருக்கும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மருத்துவ நூல்கள் வழங்கப்பட்டன. அனைத்துப் பாட நூல்களும் தமிழாக்கம் செய்யப்படாமையால் ஆங்கில மொழியிலமைந்த நூல்களும் பயன்படுத்தப்பட்டன. மாணவர்கள் தமிழிலே குறிப்புக்களை எடுத்தனர். கிறீனது 5 ஆவது மருத்துவ மாணவர் அணியினர் 11பேரும் 1864 ஆம் ஆண்டு நவம்பரில் மருத்துவப் படிப்பை பூர்த்தி செய்தனர்.



அவர்களில் ஐவர் மருத்துவர் கிறீனுக்கு உதவியாக மேலும் ஒரு வருடம் மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்தனர். இந்த ஐவரில் இருவர் 6 ஆவது அணி மாணவர்களுக்கு உடற்கூற்றியல் மற்றும் உடலியக்கவியல் பாடங்களைக் கற்பிப்பதற்காகவும் நியமிக்கப்பட்டனர். ஒருவர் கிறீனது தமிழ் ஆசிரியராகவும் விளங்கினார். ஒரு மாணவர் இயற்கைத் தத்துவவியல் பாடத்தை கையெழுத்துப்படியாக எழுதுவதற்கும் மற்றவர் மானிப்பாய் மருத்துவமனையை நடத்துவதற்கும் கிறீனுக்கு உதவினர். 1864 ஆம் ஆண்டு மானிப்பாயிலுள்ள மருத்துவமனையில் 1260 பேருக்கும் யாழ்.நகரிலிருந்த ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தினது மருத்துவமனையில் 6480 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

### சுதந்திர இலங்கையின் மருத்துவ மற்றும் சுகாதார சேவை

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அன்று 1948 ஆம் ஆண்டில் நாடுமுழுவதும் 246 அரச மருத்துவமனைகள் இயங்கின. இம் மருத்துவமனைகளில் மொத்தமாக 18,822 படுக்கை வசதிகள் காணப்பட்டன. அப்போது இலங்கையின் சுகாதார மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தவர் எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்க.

### கொழும்பு பொது வைத்தியசாலை (General Hospital Colombo) - 1948

இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டில் கொழும்பு பொது மருத்துவமனையில் கட்டணம் செலுத்தும் 115 படுக்கை வசதிகள் உள்ளடங்கலாக 1294 படுக்கை வசதிகள் காணப்பட்டன. இங்கு 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 55797 நோயாளருக்கு விடுதிகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. இவர்களில் 1451 பேர் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர். மொத்தமாக 2568 இறப்புக்கள் பதிவாகின. மருத்துமனைக்கு நாளாந்தம் வருகைதந்து சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கையை அவதானித்த போது 1948 நவம்பர் 9 ஆம் திகதி ஆகக் கூடுதலாக 2489 பேர் சிகிச்சைக்காக வருகை தந்தனர். அதேவேளை 1948 யூன் 18 இல் ஆகக் கூடுதலாக 115 பேர் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர். இந்த ஆண்டில் 11,423 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. 792 சிறிய சத்திரசிகிச்சைகள் வெளிநோயாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை 151, 139 பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது. குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் 460,857 தடவைகள் வெளிநோயாளர் பிரிவில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர்.

இந்தக்காலப் பகுதியில் கொழும்பு பொது மருத்துவமனையின் என்பு முறிவு சிகிச்சை நிலையத்தில் 32 பேருக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன. இரத்த வங்கியில் 1,933 பேர் இரத்ததானம் செய்திருந்தனர். இவர்களில் 1,814 பேருக்கு இரத்தானம் வழங்கியமைக்காக வெகுமானமாக தலா 10 ரூபா வழங்கப்பட்டது. எக்ஸ் - கதிர் பரிசோதனைக்காக கட்டணம் செலுத்தும் பிரிவில் 1677 பேரும் கட்டணம் செலுத்தாத பிரிவில் 23,194 நோயாளரும் எக்ஸ் - கதிர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

### யாழ்ப்பாணம் சிவில் - மருத்துவமனை (Civil Hospital Jaffna) - 1948

1850 இல் ஆபத்துக்கு உதவி நண்பர்கள் கழக மருத்துவமனை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். போதனா மருத்துவமனையானது 1850 முதல் 1907 வரை ஆபத்துக்கு உதவி மருத்துவமனை என்ற பெயரில் இயங்கியது. பின்னர் 1908 முதல் 1955 வரை யாழ்ப்பாணம் சிவில் மருத்துவமனை என்ற பெயரில் இயங்கியது. 1948 ஆம் ஆண்டு சிவில் மருத்துவமனையில் 248 படுக்கை வசதிகள் காணப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் மொத்தமாக 11,486 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. சராசரியாக 370 நோயாளர் நாளாந்தம் சிகிச்சை பெற்றனர். 266 இறப்புக்கள் நிகழ்ந்தன. 670 பாரிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.


*(யாழ்ப்பாண மருத்துவ வரலாற்றின் 17 ஆவது பகுதியில் (சஞ்சீவி 22.01.2023) ஒரு திருத்தம் (1860) இக் காலப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கடிதம் அமெரிக்காவைச் சென்றடைய 3 தொடக்கம் 4 மாதங்கள் எடுத்தது என்று வரவேண்டியது தவறுதலாக 8 மாதங்கள் என்று இடம்பெற்று விட்டது.)*

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோணல் கடவுள்

○ இராகவன்



7

> "கோமாளிப் பயல்களே! நிறுத்துங்கடா. உங்கள் கூத்தை என் பாட்டில் போய்க்கொண்டிருந்த என்னை உங்கள் அபிமான நடிகன் எனத் தூக்கிவந்து விசர்வேலை பார்த்துக் கொண்டிருக்கறீர்களே! உங்கள் கோமாளித்தனத்துக்கு ஓர் எல்லையில்லையா?"

எங்களது மாமன்னர் என்றைக்குமே அழுவதை விரும்பியவர் அல்ல. அவர் எப்போதும் சிரித்த முகத்துடனேயே தோன்றுவார்."நான் சட்டென்று குறுக்குறுத்துச் சிரிக்கத்தொடங்கி னேன். பார்வையாளர் மத்தியில் பலத்த கூச்சலெழுந்தது. அவனும் சளைக்காமல் தொடர்ந்தான்.

"அமைதி!, அமைதி! நீங்கல் அவசியமின்றிக் கூச்சலிடுவது நமது மாமன்னரை அவமதிப்பதாகும். நான் சொல்வதை பொறுமையாகக் கேளுங்கள். மாமன்னர் என்றைக்குமே அழுவதை விரும்பியவரல்லர் என்பதை நான் ஏற்கனவே உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். அவர் எப்போதுமே சிரித்துக்கொண்டிருப்பதைத்தான் விரும்பினார். சிரிப்பதற்கென்றே ஒருநாளை ஒதுக்கிஎங்களையெல்லாம் கட்டாயப்படுத்திச் சிரிக்க வைத்தார். அந்நிலையில் மன்னர் உயிர்நீக்கும் தருணத்தில் அழுதிருக்கச் சாத்தியமில்லைத்தானே? அவர் அமைதியாகவே உயிர்நீத்திருப்பார் என்று நாங்கள் கருதியிருந்தோம். ஆனால் அதுவும் உண்மையில்லை என்பது இப்போது தான் புரிகிறது. அவர் உயிர்நீக்கும் தருணத்தில் கூடச் சிரித்திருக்கிறார் என்பது சந்தேகத்துக்கிடமின்றி உறுதியாகிவிட்டது. இப்போது நீங்கள் கேட்டது நமது மாமன்னர் உயிர்நீத்த தருணம் சிரித்ததைத் தான். உயிரோடு கலந்து சென்ற சிரிப்பொலி இப்போதுதான் திரும்பிவந்திருக்கிறது. இதுவரை மாமன்னர் உயிர்நீத்த துக்கத்தின் பொருட்டு அழுதுகொண்டிருந்தோம். இது எங்களது மனச்சாந்திக்கானது மட்டுமே. இது நமது மாமன்னரின் ஆத்மாசாந்திக்காக அல்ல. அவர் என்றைக்குமே அழுவதை விரும்பியதில்லை என்பதைத் தொடக்கத்திலே சொல்லியிருக்கிறேன். எனவே இப்போது மாமன்னரின் ஆத்மாசாந்திக்காக இரு நிமிட சிரிப்பொலி செலுத்துவோம். "

அவன் சொல்லி முடித்துவிட்டு சிரிக்கத்தொடங்கினான். அவனைத் தொடர்ந்து ஏனையோரும் சிரிக்க எனக்கு அது பெரும் வேடிக்கையாக இருந்தது. பார்வையாளர்களின் ஒரு பகுதியினர் சிரிக்க இன்னொருபகுதியினர் சங்கு ஊதுவதைப்போல ஊளையிட்டனர். எஞ்சியோர் 'கூவடிக்கத்' தொடங்கினர். எனக்கிப்போது அழத்தோன்றியது. ஆனால் அழ முடியவில்லை. "என்ன நடிகமாமணியே அழத்தோன்றியும் அழமுடியவில்லையா? உண்மைதான் அழுகையும் சிரிப்பும் தானாக நிகழவேண்டும். அதுதான் மெய்யானதாகவிருக்கும். அநேகர் கருதுவதைப்போல அழுவதும் சிரிப்பதும் வெகுசுலபமானதல்ல. எல்லோரும் இங்கே அழுவதாகவும் சிரிப்பதாகவும் கருதிக்கொண்டு பாவனை செய்கிறார்களே ஒழிய, மெய்யாகவே அழுபவர்களும் சிரிப்பவர்களும் வெகுசொற்பம்" என என்னைநோக்கிக் குனிந்து ஒரு கோமாளி சொன்னான்.

எனக்கு அவனை ஆசைதீர உதைக்க வேண்டுமெனத் தோன்றியது. எனினும் கோபத்தை அடக்கிக்கொண்டேன். உடனடியாக அங்கிருந்து வெளியேறிவிடவேண்டுமென்பதே எனது ஒரேயொரு நோக்கமாக இருந்தது. அவன் இன்னமும் என்னை நோக்கிக் குனிந்தபடியே நின்றிருந்தான். அவனிடம் உதவி கேட்கத்தோன்றியது. கேட்டேன்.

"நான் இங்கிருந்து உடனடியாக வெளியேற உன்னால் எனக்கு உதவ முடியுமா? உதவினால் நான் உனக்கு என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன். "

அதற்கு அவன் " நீங்கள் இப்போது இங்கிருந்து வெளியேறிச் செல்லத்தான் போகிறீர்கள். இந்தச் சிரிப்பாஞ்சலி நிகழ்வு முடிந்ததும் உங்களை நல்லடக்கம் செய்ய எடுத்துச்செல்லப்போகிறோம். அப்போது நீங்கள் தப்பித்துச் செல்லப் போதுமான அவகாசம் கிடைக்கும். உங்களுக்கு இன்னுமொரு இரகசியத்தைச் சொல்லட்டுமா? இந்த அரங்கில் நாடகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் எவருமே நடிகர்கள் அல்ல. ஏதோவொரு காரணத்தால் பாதுகாப்பு நோக்கம் கருதி நடிகர்களாகப் பாவனைசெய்கிறார்கள். நாம் எல்லோருமே இங்கிருந்து வெளியேறி தப்பித்துச் செல்ல வேண்டியுள்ளது. இதுவரை தப்பித்துச்செல்வதற்கான திட்டமெதையும் நாங்கள் போடவில்லை. இங்கிருந்து வெளியேறிச்செல்லும் போது திட்டமிட்டுக் கொள்ளலாமென எண்ணியிருக்கிறோம். உங்களுக்கு ஏதும் திட்டமிருந்தால் சொல்லுங்கள். எங்களுக்கும் அது பயனுடையதாகவிருக்கலாம்" என்றான்.

"இதில் பெரிதாகத் திட்டமிட ஏதுமில்லை. நீங்கள் என்னைக் காவிச்செல்லும் போது உங்களுக்கு வசதியான இடத்தில் என்னை இறக்கிவிடுங்கள். அதுவே போதுமானது" என்று அவனிடம் சொன்னேன். அவன் அதற்கெதுவும் சொல்லாமல் மறுபடியும் நிமிர்ந்து சிரிக்கத்தொடங்கினான். எனக்கு அவனை உதைக்கத்தோன்றியது. "கோமாளிப் பயல்களே! நிறுத்துங்கடா. உங்கள் கூத்தை என் பாட்டில் போய்க்கொண்டிருந்த என்னை உங்கள் அபிமான நடிகன் எனத் தூக்கிவந்து விசர்வேலை பார்த்துக் கொண்டிருக்கறீர்களே! உங்கள் கோமாளித்தனத்துக்கு ஓர் எல்லையில்லையா?" எனக்கத்தினேன். நான் கத்தியது எனக்கே கேட்கவில்லை. படிப்படியாக என் எடை குறைந்துவருவதை உணர்ந்தேன். சற்றுநேரங்கடந்த பின்னர் என்னால் மிதக்கமுடிந்தது. அவர்களிடமிருந்து விடுபட்டு மேலெழுந்து மிதக்கலானேன். பார்வையாளர் மத்தியில் கூச்சல் மிகுந்து குழப்பம் ஏற்பட்டது. சிலர் மிதந்துகொண்டிருக்கும் என்னை நோக்கி ஓடிவந்தனர். அவர்களின் கைகளில் சிக்கிவிடுவேனோ. எனப்பயமாக இருந்தது. அவர்களது கைக்கெட்டக்கூடியதாகத்தான் மிதந்துகொண்டிருந்தேன். ஒருவன் என்னைப் பிடிக்கும் நிலைக்கு நெருங்கிவிட்டான். இவன் நிச்சயமாக என்னைப் பிடித்து விடுவான் என நினைத்துக் கண்களை மூடிக் கொண்டேன். தெய்வசித்தமாக அது நிகழவில்லை. இன்னொருவன் அவனைத் தள்ளிவிட்டு என்னைப் பிடிக்க முயன்றான். அவனை இன்னொருவன் தள்ளிவிட்டான். மூவருமே பொத்துப்பொத்தென தடக்கி விழுந்து விட்டனர். அந்த வேளை பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல ஒரு சுழல் காற்று வீசியது. நான் மேலுயர்ந்து வெளியேறி நல்ல உயரத்தில் மிதந்து செல்லலானேன்.

திரும்பவும் அந்த உலங்குவானூர்தியையோ அல்லது அந்த நீர்க்காகத்தையோ இனி ஒருபோதும் எனது வாழ்க்கையில் சந்திக்கவே கூடாதென நினைத்துக்கொண்டேன். இப்போது சாதுவாக மழை தூமித்தது. இப்படியே சற்றுநேரம் தூமித்துவிட்டு ஓய்ந்துவிடும் என எண்ணினேன். நான் எண்ணியதற்கு முற்றிலும் மாறாக மழை வலுத்துப் பொழிய ஆரம்பித்தது. நான் மிக வேகமாகக் கீழே இறங்கினேன். (தொடரும்)

# பீட்ரூட் ஜூஸ் ஏராள நன்மைகள்



உடல் ஆரோக்கியம் மேம்பட காய்கறிகள் மிகவும் இன்றிமையாத ஒன்று .அதிலும் பீட்ரூட் நம் உடல் நலத்திற்கு ஏராளமான நன்மைகளை தரக் கூடியது .பீட்ரூட் இரத்த சோகை மட்டுமில்லாமல் நம் உடலில் ஏற்படக்கூடிய பல்வேறு நோய்களையும் குணமாக்கும் மற்றும் வரமால் தடுக்கும் ஆற்றல் இதற்கு உண்டு .

அப்படி, இந்த பீட்ரூட்டில் என்னென்ன சத்துக்கள் உள்ளது, என்றால் மெக்னீசியம், பாஸ்பரஸ், சோடியம், பொட்டாசியம் ,நைட்ரேட் ,கால்சியம்,காப்பர், செலினியம், ஜிங்க் , இரும்புச்சத்து மற்றும் மாங்கனீசு போன்ற சத்துக்கள் நிறைந்திருக்கும்.

### ரத்த ஓட்டம் சீராகும்

பீட்ரூட்டில் இருக்கும் நைட்ரேட் உயர் ரத்த அழுத்தத்தை குறைத்து குழாய்களில் இரத்த ஓட்டத்தை சீராக்கும் ,இதன் மூலமாக ரத்த அழுத்தம் சீராக இருக்கும்.

### புற்றுநோய் வராமல் தடுக்கும்

தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வர இதில் இருக்கும் அதிகப்படியான ஆன்டிஆக்ஸிடன்ட் உடலில் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுப்பதோடு உண்டாவதற்கான காரணிகளையும் அழிக்கும்.

### ரத்தசோகை குணமாகும்

மிக முக்கியமாக உடலின் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.பீட்ரூட்டில் ஹீமோகுளோபின் எண்ணிக்கை அதிகரிக்கத் தேவையான இரும்புச்சத்து வைட்டமின் பி மற்றும் புதிய ரத்த அணுக்கள் உற்பத்திக்கு தேவையான சத்துக்கள் வளமான அளவில் இருக்கிறது .

### உடல் நச்சுக்களை வெளியேற்றும்

நம் உடலில் நச்சு கழிவுகள் அதிகமாவதால் தான் உடலில் பல்வேறு நோய்கள் உண்டாகிறது .இத்தகைய டாக்ஸின்களை உடலில் இருந்து வெளியேற்றும் ஆற்றல் இதற்கு உண்டு .

### கல்லீரலை புதுப்பிக்கும்

பீட்ரூட் ஜூஸை குடித்து வர இதில் இருக்கக்கூடிய ஆன்டி ஆக்ஸிடன்ட் கல்லீரல் செல்கள் பாதிப்படைவதைத் தடுப்பதோடு புதிய செல் உற்பத்திக்கு உதவி செய்கிறது.

### உடல் எடையை குறைக்கும்

அதிக உடல் எடையினால் அவதிப்படுபவர்கள் தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வர உடலில் இருக்கக்கூடிய தேவையில்லாத கொலஸ்ட்ராலை குறைத்து உடல் எடையை சீராக வைக்க உதவுகிறது .

### அஜீரணக் கோளாறுகளை போக்கும்

தினமும் பீட்ரூட் ஜூஸ் குடித்து வர இதில் இருக்கக்கூடிய நார்ச்சத்து உடலில் செரிமான உறுப்புக்களை சீராக இயக்கி உணவு செரிமானம் சீராக நடைபெற உதவி செய்யும் .

### உடல் சோர்வை நீக்கும்

உடல் இயக்கத்திற்கு தேவையான சக்தி கிடைக்காமல் போகும் போதுதான் உடல் சோர்வு போன்ற பிரச்சினைகள் வரும். இது நம் உடல் செல்களுக்குத் தேவையான ஆக்சிஜனை சீராக கிடைக்க உதவி செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாவலுக்கு ரெடி!

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், மேலும் சில அரசியல் செயற்பாட்டாளர்களும் சஜித் பிரேமதாஸவின் செயற்பாடுகள் தொடர்பில் கடும் அதிருப்தியில் இருக்கின்றனராம். கட்சியின் சார்பில் வழங்கப்படும் பதவிகள் சஜித்தால் தன்னிச்சையாக வழங்கப்படுவதாகவும், செயற்குழுவில் அதுபற்றி ஆராயப்படுவதில்லை எனவும் அவர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவையும் சந்தித்து, தமது ஆதங்கங்களை அவர்கள் கொட்டித் தீர்த்துள்ளனர் எனவும் தகவல். ஆக வெகுவிரைவில் தாவல் அரசியல் இனிதே அரங்கேறுமென அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## 13 பரப்பாகு

உள்ளாட்சிசபைத் தேர்தலில் சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாடுவதற்குத் திட்டம் போட்ட விமல் அணிக்கு, மேடை பேச்சுகளுக்கு சிறந்த தொனிப்பொருள் கிடைக்கவில்லை. இதனால் ராஜபக்சக்களை விமர்சித்தே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.
இந்நிலையிலேயே அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு, விமல் தரப்புக்கு பரப்புரைக்கான களத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும், அதை தோற்கடிக்க ஒன்றுபடவேண்டும் என்றெல்லாம் தற்போது அனல் பறக்க பரப்புரைகள் சிங்கள பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
தமது அணிக்கு வாக்களித்து ஆணை வழங்கினால் மட்டுமே 13 ஆல் ஏற்படும் ஆபத்தை தடுக்க முடியும் எனவும் சிங்கள மக்களை உசுப்பேத்தும் விதத்தில் பரப்புரைகள் இடம்பெறுகின்றன. அதேவேளை, கனடா விதித்த தடையை வைத்து கரைசேர்ந்துவிடலாம் என திட்டம்போட்ட ராஜபக்ச தரப்புக்கு, அந்தத்திட்டம் எடுபடவில்லையென தெரியவருகின்றது.

## சும்மாயிருந்த சங்கை....!

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் களமிறங்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிவிப்பால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேலும் பிளவடையும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.
கட்சியின் மத்திய குழுவின் அனுமதியின்றி, ஆலோசனையைப் பெறாமல் மைத்திரி இவ்வாறு அறிவிப்பு விடுத்தது பெரும் தவறு என சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதன் பின்னணி குறித்து ஆராயவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.
கட்சி இப்படியே பயணித்தால் அழிவு நிச்சயம் எனவும், தங்களுக்கு மாற்றுவழியைத் தேட வேண்டி வரும் எனவும் அவர்கள் அபாயச் சங்கு ஊதியுள்ளனர். "மைத்திரி தேர்தலில் போட்டியிட்டால் எப்படியும் தோற்பார். அதை வைத்து தலைவர் பதவிக்கு வந்துவிடலாம் என இன்னொருவர் திட்டம் தீட்டுகிறார் போலும்" என்று தற்போதைய கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறியை மற்றுமொரு உறுப்பினர் மறைமுகமாகச் சாடியுள்ளார். சும்மாயிருந்த சுதந்திரக் கட்சி என்ற சங்கை ஊதிக் கெடுத்துள்ளார் மைத்திரி.

## மாரடைப்பா? கொலையா?

முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே சாகவில்லை, அவர் சாகடிக்கப்பட்டுள்ளார் என மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள கருத்தும் தெற்கு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
களுத்துறை மாவட்டத்துக்கான வேட்புமனு ஒதுக்கீடு தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் ரெஜினோல்ட் குரே, சுதந்திரக்கட்சி சார்பில் பங்கேற்றிருந்தார். இதன்போது அவருக்கும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கெவிந்து குமாரதுங்கவுக்கும், குரேவுக்கும் இடையில் கடும் சொற்சமரும் மூண்டுள்ளது.
இதனால் உளரீதியில் பாதிக்கப்பட்ட ரெஜினோல்ட்குரே அகால மரணமடைந்தார். இந்த சாவுக்கு மாரடைப்பே காரணம் எனக் கூறப்பட்டது.
முன்னதாக 'ஹெலிகொப்டர்' கூட்டணியில் இணைந்திருந்த சுதந்திரக்கட்சி மேற்படி சம்பவத்தையடுத்து கூட்டணியில் இருந்து ஒதுங்கி, தனி வழி செல்லும் அறிவிப்பை விடுத்தது. இதற்குப் பல்வேறு காரணங்களும் கூறப்பட்டன.
ஆனால், ரெஜினோல்ட் குரேயின் மரணத்தையடுத்தே சு.க. முடிவை மாற்றியது என குறிப்பிட்டுள்ள மைத்திரி, அவர் சாகவில்லை, சாகடிக்கப்பட்டுள்ளார் எனவும் கூறியுள்ளார்.
மைத்திரியின் இந்த அறிவிப்பு விமல், டலஸ் உள்ளிட்ட தரப்பை கொதிப்படைய வைத்துள்ளது. இனிமேல் மைத்திரியை கூட்டணியில் இணைக்கக்கூடாது என பலரும் வலியுறுத்த தொடங்கியுள்ளனர்.

## 2023 பெப்ரவரி 4

செ.சுதர்சன்

இன்று
சூரியனும் உதிக்காது போயிற்று.
காலிமுகக் கரையில்
அலைகளும் எழவில்லை.
பறவைகளும்
சிறகை விரிக்கவில்லை.
மேக மெத்தைகளும் பறக்கவில்லை.
தேசத்தைப் பாட
நானும் கறுப்பை உடுத்திக்கொள்கிறேன்.

கடல்கள் சூழ்ந்திருந்தும் என்ன!
மலைகள் நிமிர்ந்திருந்தும் என்ன!
மக்கள் மூச்சுத் திணறும் தேசத்தில்
சுடலைச் சாம்பலாகிய
சுதந்திரத்தை
எப்படிப் பாடுவேன்?

எழுதுவதற்கும்
என்னிடம் பல் துலக்கும்
கரித்துண்டுகளே உள்ளன.

பறவைகளைப் போலிருந்த மக்கள்
பாறாங்கல்லாய்
இறுகிக் கிடக்கும் நாளில்,
தானிய மணிகளாய்
என் சொற்களை
எவ்வாறு பரிமாறுவேன் அவர்களுக்கு...

ஒரு குழந்தையின் முகத்தில்
இந்த ஒரு நாளாவது
மகிழ்ச்சியை விரிக்கவில்லை எனில்
ஒரு முதியவனின் கண்களில்
இந்த ஒரு நாளாவது
நம்பிக்கையை நடவில்லை எனில்
எனது பாடலில்
என்னதான் இருக்கிறது!

இசைக் கலைஞரின் முகங்களுக்கும்
அவர்கள் அணிந்து செல்லும் ஆடைகளுக்கும்
இடையில்
மகிழ்வும்
அணிவகுப்பு வீரரின் முகங்களுக்கும்
அவர்கள் ஏந்திய ஆயுதங்களுக்கும் இடையில்
இறுமாப்பும் அறுபட்டுப்போயிருக்கும் போது...
நானும் எதைத்தான் பாடுவேன்!

பாணின் விலையும்
பால்மாவின் விலையும்
தேசியக் கொடிக்கும் மேலான உயரத்தில்
பறக்கும்போதும்
வாளேந்திய சிங்கம்
கேலிச் சித்திரமாய்த் தோன்றும்போதும்
நான் பாடுவதற்கு என்னதான் இருக்கிறது!

என் தேசத்தை
ஒரு பச்சை யானையின்
சப்பாத்துக் கால்கள்
நசுக்கித்தள்ளும்
இன்றைய அதிகாலைக் கனவுகூட
நான் எழுதுவதற்கு
எந்த வரியையும் விட்டுச்செல்லவில்லையே!

ஆனாலும்
ஒரு வரியையாவது பாடிவிட்டுப் போகிறேன்.

"தேசியகீதத்தின் வரிகளுக்கிடையில்
'வரிகள்' [illegible]"

04/02/2022

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை

இராமநாதன் தனது உரையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை வன்மையாகக் கண்டித்தார். ஒட்டுமொத்த சிங்கள மக்களுக்கும் நட்டஈடு விதிக்கப்பட்டது தவறு என இராமநாதன் வாதாடினார். எந்தவொரு தவறும் செய்யாத ஒரு அப்பாவிச் சிங்களவர்கள் எதற்காக நட்டஈடு செலுத்த வேண்டுமென இராமநாதன் கேள்வியெழுப்பினார்.

"நீங்கள் பிரிட்டனில் நடைபெற்ற ஏதாவது ஒரு கலவரத்துக்கு நட்ட ஈடு செலுத்தியிருக்கிறீர்களா ?" என்று சட்டமா அதிபரைக்கேட்க விரும்புகிறேன். அரச அதிபர்கள் தமது கடமையைச்சரிவரச்செய்யவில்லை.
நீதிபதிகள் தமது கடமையைச் சரிவரச்செய்யவில்லை; கண்டி நீதிபதி போல் பீரிஸ், பெரஹறா ஊர்வலம் போகும்போது பள்ளிவாசல் வாசலில் ஒலி எழுப்ப வேண்டாமென உத்தரவிட்டுள்ளார். இரவு ஒரு மணிக்கு பள்ளிவாசல் மூடப்பட்ட நிலையில் பள்ளிவாசலில் என்ன நடைபெறுகிறது? வெசாக் கண்டியரசர்களின் காலத்திலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.
தமது சொந்த நாட்டில் தாம் வெசாக் தினத்தை கொண்டாடுவதற்கு தமக்கு அனுமதியில்லையா? என சிங்களவர்கள் ஆதங்கப்பட்டனர். பிரிட்டிஷ் அரசினால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்களும் காவல்துறையும் தமது கடமையைச் சரிவரச்செய்யவில்லை.
- இவ்வாறு இரவு 10.45 மணிவரை தொடர்ந்து உரையாற்றிய இராமநாதன் கடிகாரத்தைப் பார்த்து விட்டு தானாகவே உரையை நிறுத்தினார். (வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

120

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | ■ | | ■ |
| ■ | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | ■ | 15 | 16 | | ■ | |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| 19 | 20 | | ■ | 21 | 22 | | ■ |
| 23 | | ■ | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

.....................................................................

கையொப்பம்:..........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. அருச்சுனன் மகன் 5. திற்கும் 7. இளமையான ராசி 8. அதிவேகம் 9. முனிவர் நோற்பது 11. இது கொன்றால் உய்வில்லை 12. அரவம் 14. சம்மதக் குறிப்பு 15. சிந்தனை 17. பலவாகிய தன்மை 18. கிணற்றின் கருவி 19. தவம் 21. உயிரை எடுப்பவன் 23. வலிமை 24.தொந்தரவு 26. கவி

## மேலிருந்து கீழ்

1. ஏதிலி 2. முன்னல 3. மானிடன் 4. நீண்டகால அளவு 5. சமுத்திரம் 6. தலையில் எழுதப்பட்டது 10. தரித்திரன் 11. தந்திர மிருகம் 12. மண் குண்டம் 13. வதந்தி 14. பரம்பரை 16. அடுக்களையில் நடப்பது 17. பால் தருவது 18. ஆகாயம் 20. இசைப்பாட்டு 22. பர்வதம்

**சொற்சிலம்பம் போட்டி 119 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1.சிகிச்சை 4. ஆகுதி 6. வழி 7. வசதி 9. அம்மா 10. வேலை 11. புதுமை 13. திகதி 15. குருதி 17. லயம் 18. தீ 19. மாரீசன் 21. நாகரிகம் 24. பள்ளி 25. ஆழி

**மேலிருந்து கீழ்**

1. சிவப்பு 2. கிழி 3. சைவம் 4. ஆதி 5. தில்லை 8. சமாதி 9. அமைதி 10. வேதியன் 12. துரு 14. கலசம் 16. குமாரி 20. ரீகன் 21. நாள் 22. களி 23.கோழி

**செர்றசிலம்பம் போட்டி இல.120**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

10.02.2023 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 119 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

**1 ஆம் பரிசு**
சி. தியாகேஸ்வரி,
டச்சுவீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**2 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ.கிருஷாந்தி,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
தி.அமிர்தகௌரி,
கண்ணன் ஆலய வீதி,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
மு.கந்தையா,
தபாலக வீதி, சாவகச்சேரி

**5 ஆம் பரிசு**
இ.தர்சனா,
கல்லூரி வீதி,
மானிப்பாய்.



# ஆழிக்குமரன்: உடலையே ஆயுதமாக்கியவன்

○ கோகுலராகவன்

ஆழிக்குமரன் ஆனந்தன்.

பாடசாலை நாட்களில் எங்கள் கனவுக் கதைகாரன்நாயகன். அவரின் கின்னஸ் சாதனைகளைப் பற்றி சிலாகித்துக் கொள்வோம்.

"வளர்ந்த பிறகு ஒரு சாதனை செய்யவேணும்" என்று கற்பனை செய்வோம்.

நீச்சல் கொஞ்சம் கடினம்.

நடக்கிறது, நடனம் ஆடுவது மாதிரி ஏதாவது செய்யலாம்.

வளர்ந்தாச்சு.

ஆனால், தேசிக்காய் வாங்கப் போகவே மோட்டார் சைக்கிள் தேவை. இதில சாதனை வேறு. நடக்கிற காரியமா?

1984 இல் அவரது திடீர் மரணம் யாழ்ப்பாணத்தின் இதயத்தைத் தொட்ட மரணம். அவரைப்பற்றி பேசாதவர்கள் இல்லை. ஒரு சாதனையாளனை இழந்துவிட்டோம் என்ற பரிதவிப்பு எல்லோர் பேச்சிலும், உரையாடலிலும் மிகையாக இருந்தது.

ஆனந்தன் ஒன்பது கின்னஸ் சாதனைகளின் சொந்தக்காரன். ஒன்றை ஒன்று மிஞ்சும் சாதனைகள் அவை. அவர் தேர்ந்து எடுத்த சாதனைகள் சில சாதரணமானவைதான். ஆனால் உடலை வருத்துபவை, சில மிகவும் கடினமானவை.

பாக்கு நீரிணையை நீந்திக்கடந்ததே அவரது முதலாவது சாதனை .

இது இரு தடவை நிகழ்ந்தது. அதாவது நீந்திக் கடந்துவிட்டு திரும்பி நீந்தி வந்தார்.

1954 இல் பாக்கு நீரிணையைக் கடந்த நவரத்தினசாமியின் சாதனையை முறியடிக்க விரும்பினரா? என்பதற்கு பதிவுகள் இல்லை. ஆனந்தன் பாக்குநீரிணையை நீந்திக் கடந்த பின், வீரகேசரிப் பத்திரிகை ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் "ஆழிக்குமரன்" எனும் பட்டத்தை ஆனந்தனுக்கு வழங்கினார்.

இதன்பின் பல சாதனைகளை நிகழ்த்தத் தொடங்கியவர் தனது மரணத்தின் பின்னரே அவற்றை நிறுத்தினார். அந்தக் காலத்தில் முன்பின்னாக நடனம் (twist dance) ஆடுவது புதிய நடன வகையாக உருவாகி இருந்தது. இதை ஒரு சாதனையாக நிகழ்த்தினார். இதில் ஏற்கனவே ஒரு சாதனைப் பதிவு இருந்தால் அதனை நேர வித்தியாசத்தால் முறியடிக்கவேண்டும். இதை இலக்காக வைத்து ஆழிக்குமரன் சாதனைகளைத் திட்டமிட்டார்.

அப்போது எனது மாமாவும் அவரது நண்பர்களும் இளைஞர்கள் .

இவை பற்றிப் பேசுவார்கள்.

"இதெல்லாம் நாங்களும் செய்யலாமடாப்பா"

"சும்மா முன்னுக்கு பின்னாய் நடக்கிறது தானே"

"சைக்கிளில் நாலுதரம் கொழும்பு போய் வந்தால் கின்னஸ் சாதனை தான்ரா"

"டேய் கொம்மா தேடப்போறா ஓடு"

"கொப்பர் வாறாற்ரா"

என்றால் காணும் வேலிப்பொட்டுக்கால் ஓடிவிடுவார்கள்.

ஆழிக்குமரன் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி. இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டம் பெற்றவர். சிறந்த கல்விக்கு பின்னரே சாதனைகள் செய்ய நீ...றால் அனுமதிக்கப்பட்டவர்.

அவரது சிந்தை எப்போதும் சாதனைகள் பற்றியே யோசித்துக்கொண்டிக்கும் எனக் கருதவேண்டும். ஏனெனில் ஒன்பது சாதனைகளே கின்னஸ் சாதனைகளாக பதியப்பட்டுள்ளன என்றும், சில சாதனைகளைத் தொடங்கிகைவிட்டார் என்றும் அந்த நாள்களில் பேசக் கேட்டிருக்கிறேன்.

தனது உடலை ஆயுதமாகப் பயன்படுத்தி வருத்தமான, கடுமையான பயிற்சிகளைச் செய்தே அவர் இந்தச் சாதனைகளை செய்தார்.

இதுவே அவரது சாதனைகளுக்கு உச்சக் காரணமாக அமைந்தது.

296 மைல் தூரத்தை 159 மணி நேரத்தில் இடைவிடாது நடந்து முடித்தது அவரது இன்னுமொரு சாதனை. இது ஒரு கண்டுபிடிப்பு சார்ந்த சாதனை இல்லை , ஆனால் இங்கு நாம் காணவேண்டியது அவரது மனவுறுதி, திடசங்கற்பம்.

நாமென்றால் வாறவழியில் மண் டிப்பரில் ஏறி வீடு வந்து சேர்ந்து விடுவோம். இல்லாவிட்டால் யாராவது எம்மைச் சலிப்பூட்டி , குழப்பிவிடுவார்கள்.

இவற்றை எல்லாம் தாண்டி ஆனந்தன் வெற்றி பெற்றார் என்பதே காலங்கள் தாண்டியும் சாதனை நாயகனாக மிளிர்கிறார் என்பதற்கான ஆதாரம். அவரது மன உறுதியே இந்தப் பத்தியில் அவரைப்பற்றி என்னை எழுதத் தூண்டிய விடயம்.

தன்னுடைய நாற்பத்தியோராவது வயதில் , 1984 இல் அவர் இங்கிலாந்தின் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கமுனையும்போது ஆறாவது மணித்தியாலத்தில் இறந்துபோனார். அப்போது இதை இலங்கை வானொலி அறிவித்த போது நாம் நம்பவில்லை.ஏனெனில் இலங்கை வானொலி அப்போதைய அரசியல் சூழ்நிலைகளால் பொய்கள் நிரம்பியதாக இருந்தது.

ஆனால் மறுநாள் அநேக பத்திரிகைகள் இதை உறுதி செய்தன.

ஆங்கிலக் கால்வாயின் அதிக குளிர் அவரைப் பாதித்ததால் அவர் மரணமடைய வேண்டி வந்தது.

" என்னுடைய பயிற்சி போதாது" என ஆழிக்குமரன் ஆனந்தன் மரணத் தறுவாயில் கவலை வெளியிட்டதாகச் செய்திகள் வந்தன "பயிற்சிக்கே பயிற்சி போதாது " என்ற மாதிரி ஆகிவிட்டதே !

ஆழிக்குமரன் ஆனந்தன் போலியோ நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்பதை அண்மையில் நான் அறிந்து கொண்டபோது நம்பவே முடியவில்லை.

மோட்டார் சைக்கிள் விபத்தில் அவரது மண்ணீரல் அகற்றப்பட்ட போதும் தளராதவர்.

இதனால் அவர் மீதான மதிப்பு இன்னும் அதிகரித்தது.

உடற்குறை சாதனைகளுக்கு தடை அல்ல. அவரைப்பற்றி ஆவணப்படம் ஒன்று தயாரிக்கப்படுவது மிக அவசியமான ஒன்று.

இன்றைய இளைஞர்கள் அவரது வாழ்கை வரலாற்றை வாசிக்க வேண்டும்.

திசை மாறும் வாழ்க்கையை நிலை மாற்ற ஆழிக்குமரன் ஆனந்தனை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

மரணம் வாழ்வின் முடிவல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org